குயில்

ஜனவரி 14உ முதல்
சென்னை மற்றும் தமிழகமெங்கும்

IPOUR. GKC & RKC & SONS,
PONDICHERRY.

சிறந்த அச்சுக்கோர்ப்பு!

நிறைந்த வேலைப்பாடு!

இவைகட்கு:

பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.

1. ஷாலிமார் பிஸ்கட்டுகள்
2. பேரீஸ் மிட்டாய்கள்
(டெக்கான்)
3. மாஸ்டர் டுபாக்கோ
கம்பெனி சிகரெட்டுகள்
4. வேய்க் பீல்ட் தயாரிப்புகள்
5. ஆல்விடோன்
(தென்னுற்காடு ஜில்லாமட்டும்)

புதுச்சேரி, தென்னுற்காடு ஜில்லா
வினியோகஸ்தர் :—

வி. எம். இத்ரீஸ்,
ஜெனரல் மெர்ச்செண்ட்,
47, தூய்ப்ளேக்ஸ் வீதி
புதுச்சேரி.

தந்தி: இத்ரீஸ். போன்: 193.

Tel: Lead Ph: 734
எங்கள் பொங்கல் வாழ்த்து
N. R. நடராசன்
கிருஷ்ண மெட்டல் ஸ்டோரஸ்
166, மெயின்ரோடு, பாலக்கரை
திருச்சி, 1.

N. R. சாமி
ஸ்டாக்கிஸ்ட்.
பெங்கால் எனமல் ஒர்க்ஸ் லிட்.,
சூர் எனமல் & ஸ்டாம்பிங் ஒர்க்ஸ்
(பி) லிட்.,
ஒகேல் கிளாஸ் ஒர்க்ஸ் லிட்.,
கண்ணுடி, மக்கு (எனமல்)
பீங்கான் பாத்திரங்களுக்கும்
பிளாஸ்டிக் சாமான்களுக்கும்,
மொத்தவிற்பனையாளர்.
கல்லுக்கட்டித் தெரு,
காரைக்குடி

வெள்ளையரின் வைரி!
வீரத்தின் பிறப்பிடம்!

புலித்தேவன்

வரலாற்று நாடகம் புதுவை
நகரிலே விரைவில்
நடைபெறும்.
திரு, இ. ஆர். சகாதேவன்
தம் குழுவினருடன் அரியகாட்சி
அமைப்புகளோடு
நடித்துக்காட்டுவார்.
புதுவை நாம்தமிழர் இயக்க
நிதி நாடகம்.

தமிழர் திருநாள்

விடிந்தது தைம்முதல்! தொடங்கிற்றுத் திருநாள்!
விண்ணெலாம் மண்ணெலாம் தங்கக் கதிர்த்திரள்!
வடிந்தது வடிந்தது காரிருள் வெள்ளம்!
மாயமாய் மறைந்தது கொடும்பனிக் காற்றே.
படிந்தது தமிழர்கள் முகமெலாம் உணர்வும்
பத்தரை மாற்றுத் தங்கத்துப் பூச்சும்!
ஒடிந்தது பகைவர் ஆட்சியின் அச்சும்!
உலகம் மகிழ்ந்தது தமிழக மகிழ்ச்சியால்.

புதுநெல் லறுத்த உழவர்கள் பாட்டும்,
பூவைமார் குற்றும் உலக்கைப் பாட்டும்,
இதுஎங்கள் தமிழகம் வெல்க வெல்கவே
என்று பாடும் இளைஞர்கள் பாட்டும்,
முதியவர் மீசையில் இடதுகை யிட்டு
முறுக்கேற்றி வடவரை நொறுக்கடா என்னும்
எதிர்ப்புப் பாட்டும் கடற்பின் அணியுடன்
எழுந்தன உலகெலாம் இசைத்தமி ழாக்கியே

இல்ல முகப்பெலாம் வாழையும், பாக்கும்.
இளங்குருத் தோலையும், தெங்கின் குலைகளும்,
சொல்லும் மாவிலைத் தொங்கலும் கூடியே
சோலை யாக்கின தமிழரின் தெருக்களை!
முல்லைச் சிரிப்பினர் செங்காந்தள் விரல்களால்
முன்றிலை வீட்டினை மாக்கோலம் ஆக்கினர்!
செல்வ இளைஞர்கள் அள்ளூறிப் போயினர்
செங்க ரும்பு வண்டிகள் சேர்வதால்!

மலையுடைத் தால்என பலாப்பழம் உடைத்தே
மாற்றுயர் பொற்கட்டி போல்சுளை பெற்றனர்.
தலைச்சுமை வாழைத் தேன்குவ ளைப்பழத்
தாறு வாங்கிச் சீப்பாடி வைத்தனர்.
வலக்கை தாங்காச் சேலத்துக் குண்டு
மாம்ப ழங்கள் வீடெலாம் கமழ்ந்தன.
விலக்கொ ணுக்கொடி முந்திரி கிச்சிலி
விளவன் னுசி விருப்பம் விளைத்தன.

நாழி அரிசிக்கு நானுழிப் பாலாக
நல்ல விழுக்காட்டுப் புத்துருக்கு நெய்பெறத்
தாழா நெருப்பின் அடுப்புத் தலைசுமக்கத்
தங்கப் புதுப்பானை செங்கரும்பின் சாற்ருேடும்
ஏழு நரம்பு சரிபார்க்கும் வல்லவனின்
யாழ்த்தெறிப்புப் போலும் பொங்கி எழுந்தொலிக்க
வாழியோ வாழிஎன மங்கைமார் வாழ்த்த
மங்காத் தமிழர் பொங்கலோ பொங்கலென்ருர்.

இறக்கிய பானையில் ஏலம் கமழ்ந்ததே!
எதிர்காண முந்திரிப் பருப்புச் சிரித்தன!
குறைப்பின்றி இடைக்கிடை கொம்புத்தேன் முக்கனி
கூட்டக் கண்டதும் இதுதமிழ் என்றனர்!
சிறுத்த இடைச்சியர் வலிய அணைத்தளம்
திருவாளர் தருமின்பம் இதுவாகும் என்றனர்.
சிருர்எலாம் வரப்படுத் தியபாடம் என்றனர்
சேயிழை தேனிதழ் இதுஎன்ருர் காளையர்.

முகந்தெரிந் திடும்இள வாழைக் குருத்து
முழுவீடு நிறைய வரிசையின் விரித்துத்
தகுந்தார் தமிழர் வருகென அழைத்துத்
தள்ளு கடைஆ ரியனையும், ஆரியன்
மகனெனும் கலப்பட மகனை ஒழித்து
வானப் பருதிக்கு வாழ்த்துக் கொடுத்து
வகைசேர் தமிழக அன்னைசீர் நினைத்து
வயிறு புடைக்க உண்டனர் பொங்கலே!

பொன்னுடை கட்டி நல்ல இழையணிந்த
பூவைமார் சோலையெலாம் தாவிய ஊஞ்சல்கள்
முன்னேடைப் பின்னேடைக் குலுங்கு நகைப்பான
முத்தோடு முத்தமிழ் செவிக்கமு தாமாறும்

தென்னாடு மற்றுள்ள எந்நாடும் காணாத
செங்கைத் தறியாடை தையற் கலைசிறக்க
மின்னும் பலசட்டை மேலாடை வேட்டியுடன்
வேலோடு வாளெடுத்துப் போரிட்டார் ஆமாறும்

பட்டுச் சிறாய்நல்ல பாவாடைப் பூவாடைப்
பசங்கள் தெருவழகு படைக்கின்றார் ஆமாறும்
கொட்டும் முழக்கம் கூத்தாட்டும் வாய்ப்பாட்டும்
கூடத்தும் மாடத்தும் கும்மாளம் ஆமாறும்
கட்டுமுளைக் காம்பவிழ்த்துக் கையிற் குடப்பாலைக்
காண உதவுகின்ற கறவை மலைஎருது
சொட்டுந்தேன் பூமாலை சூடித் தெருவெல்லாம்
சுவடு பொடிதுள்ளத் துள்ளுவன ஆமாறும்

பொங்கற் பெருநாள் பொன்னும் தமிழ்த்திருநாள்
பொலிவும் மகிழ்ச்சி மலிவும் புகல்வதுண்டோ!
எங்கும் மகிழ்ச்சியாம் எப்பாங்கும் ஆர்ப்பாகும்
இலங்கைத் தமிழர்களும் நலங்கொள் மலையர்களும்
அங்கங்குப் பொங்கல் அழகு விழாக்கண்டார்
அங்கிருந்தார் ஆனாலும் இங்கிருந் தாரானார்கள்
எங்கள் தமிழ்வெல்க எங்கள் தமிழகந்தான்
எம்மாட்சி கொள்க! இன்பம் மலிகவே.!

அட்டைப்பட விளக்கம்

பெற்ற தமிழகம் பெற்றது கைவிலங்கோ!
அற்றதோ மேன்மை, அழகுதமிழ் ? – சொற்கினியும்
ஆடல்மயிலும், இசைக்குயிலும் ஆட்சியம் பால்
வாடல் தவிர்த்துவாழ் வோம்.

தைத்திங்கள் முதல் நாள ௧௯௯௰

உலகுக்கோர் ஐந்தொழுக்கம்

1. ஓர் இனம் மற்றோர் இனத்தை மாய்க்க லாகாது.

2. ஒரு மொழி மற்றொரு மொழியை மாய்க்க லாகாது.

3. ஒரு நாடு மற்றொரு நாட்டைப் பற்றிச் சுரண்டும் பான்மை கட்டோடு ஒழிதல் வேண்டும்.

4. உள் நாட்டின் அமைதியைக் காக்கும் அளவுக்குமேல் பெரும்படை, விலையேறப் பெற்ற அழிப்புக் கருவிகளை எந்த நாடும் வைத்திருத்தல் கூடாது. உண்டாக்கக் கூடாது.

5 அங்கங்குள்ள சான்றோரைக் கொண்ட ஓர் உலகப் பெருமன்றம மேற்சொன்ன நான்கு திட்டங்களைச் சிதறாமல் மேற் பார்வை பார்த்து வரவேண்டும.

இவ் வைந்து ஒழுக்கநெறியில் நின்றாலன்றி உலகம். முன்னேற முடியாது.

திங்கள் மண்டலநோக்கி நாயை அனுப்பும் கருவிசெய்ய ஐம்பது கோடி செலவாயிற்றாம். அந்த நாட்டில் உள்ளவர்களும் அறிவாளிகளா? அன்புடையவர்களா?

கதிரவனை அடையப் போகின்றதாம் இன்னொரு நாட்டின் கருவி: அதற்குப் பலகோடி செலவாம் கேடுகால எண்ணந்தவிர வேறென்ன இதுவெல்லாம்? பெரும் பொருளை இவ்வாறு பாழாக்கி விளையாடும் ஒரு நாடு பொதுநலம் என்பது இன்னது என்று தெரிந்துகொண்டது என்றுகூட எண்ண முடியவில்லை ஆனால் அது பொதுவுடைமை பேசுகின்றது.

காசுதந்து குழுஉச் சேர்க்கின்றது ஒருநாடு. ஏன் அவ்வாறு செய்கின்றது? அந்த உள்ளத்தில் அறம் உண்டா? உலகைச் சுரண்டுவதுதானே அதன் உண்மை நோக்கம்.

எங்களிடம் நுண்ணறிவுடையோர் மிகப் பலர் இருக்கிறார்கள் அரும் பொருள் களை அவர்கள் கண்டுபிடிக்கின்றார்கள் என்று கூறிப் பெருமை கொள்ளுகின்றார்கள். உலகின் நல னுக்கு அந்த நுண்ணறிவுடையாரைப் பயன் படுத்துவதுண்டா? எங்கே? ஒரே நாளில் உலகத்தை யழிக்க வழிதேட அன்றோ முயற்சி செய்கின்றார்கள்.

திருவுடைய நாடு மேலும் அருளையன்றோ தேட முயலவேண்டும். தன்னாட்டு மக்கள் நன்றாய் வாழவேண்டும் அதற்காக எந்நாட்டை யும் எப்படியேனும் தொல்லைப்படுத்தலாம் என்றால் அது பெருந்தன்மை யாகுமா?

அறிவுடைய நாடு மேலும் அன்பை அன்றோ தேடவேண்டும் நாடு தோறும் நகரம் தோறும் கொள்ளைக்காரப் பசங்களையும் கொலைக்காரப் பசங்களையும் தூக்கிவிட்டுக் கலகம் செய்வதால் பயன் என்ன?

''ஒன்றுபட்ட நாடுகளின் அவை'' ஒன்று இருக்கிறதாம்! உலகை, அது அறநெறியில் செலுத்துகிறதாம்; எங்கே செலுத்துகிறது? சின்ன நாட்டுக்கு மேலும் இன்னல் தேடுவதில் மும்முரப் படுகின்றது.

உலகம் இன்று அறமிலாத அன்பிலாத தீயர்களிடம் இருக்கின்றது; அது மீட்சி யடைதல் வேண்டும். நாம் மேற்கூறிய ஐந் தொழுக்கநெறியில் உலகை நிறுத்தவேண்டும்.

வடவன், தமிழனை இகழ்வானா? தமிழ் மொழியை இந்தியால் கொல்ல எண்ணுவானா? தமிழன் வரலாற்றை மாற்றியமைக்க எண்ணு வானா? தமிழினத்தைத் தலைசாய்க்க முயலு வானா? தமிழ்நாட்டைச் சுரண்டுவானா?– இத்தனை கொடுமைகளையும் வெளிப்படையாக நடத்திக் கொண்டுதானே இருக்கிறது நேரு வின் ஆட்சி!

தமிழர்களே! தமிழர் திருநாள் இது! உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் வேண்டும் ஒன்றுபட வேண்டும். பகைவர் இந் நாட்டை விட்டுச் சென்றுபட வேண்டும். தமிழ் வாழ வேண்டும். தமிழினம் தன் இயற்கை நிலையை எய்த வேண்டும்;

தமிழன் மீண்டால் – தமிழ்நாடு விடுதலை யடைந்தால் உலகை நன்னிலைக்கண் நிறுத்த முடியும்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழகம்!!

<O>

ஜனநாயகம்

பெரியார்,
ஈ. வெ. ரா.

நமது நாட்டில் சுமார் 40ஆண்டுகளில் காந்தியார் மதவேஷம் போட்டுக்கொண்டு கடவுளை முன்னடியாகவைத்து அரசியல் சூதில் இரங்கிப் பார்ப்பனர்களின் ஆதரவும் பார்ப்பன பத்திரிகைகள் விளம்பரமும் பெற்று நடத்தின காரியங்களின் பயனாய் நாம் இயற்கையாய் அடைந்திருக்கவேண்டிய முன்னேற்றம் அடையாமல் போனதோடு வெகுதூரத்திற்குப் பின்னால் போய்விட்டோம் என்பது மாத்திரமல்லாமல் மக்களிடையில் பொதுவாய் இருந்துதீர வேண்டிய ஒழுக்கமும் கெட்டுக் காட்டுமிராண்டி – கீழ்த்தர மக்களாக ஆக்கப்பட்டு விட்டோம்.

இந்த நிலைக்கு நாம் போகநேரிடும் என்று நான் 1927-ம் ஆண்டிலிருந்தே சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறேன்.

இன்று மக்கள் பெரும்பாலோரிடம் ஒழுக்கம் நாணயம் என்பது அறவேஇல்லாமல் போய்விட்டது.

"அரசாங்கத்"திடம் நீதிநேர்மை என்பவை சிறிதும் காணமுடியாதவைகளாகிவிட்டன அதிகாரிகளிடம் சிபார்சு சுயநலம் இலஞ்சம் இல்லாமல் எந்த ஒருசிறு காரியங்கூட மக்கள் அடைய முடியாமல் போய்விட்டது. ஆளும் கட்சியார் லைசன்சு (அனுமதி) பெற்ற ஒரு கொள்ளைக் கூட்டத்தார் போலவே ஆகி விட்டார்கள். ஆளும் கட்சியில் சேர மக்கள் தவம் கிடக்கிறார்கள்

ஆளும் கட்சியாரால் சேர்த்துக் கொள்ள மறுக்கப்பட்டவர்களும் தள்ளப்பட்டவர்களுமேதான் பெரிதும் நாட்டில் அரசியல் கட்சிக்காரர்களாகப் பலகட்சிகளை ஏற்படுத்திக் கொண்டு சுயநல வயிற்றுப் பிழைப்புக்கு வகை தேடித்திரியும் மக்களாக இருந்து வருகிறார்கள்.

பொதுமக்களிடம் பெரிதும் புத்தியும் இல்லை, ஒழுக்கமும் இல்லை, மானமும் இல்லை, என்கிற நிலை இருப்பதால், எந்தக்காரணத்தை முன்னிட்டும் ஆளும் கட்சியும் வயிற்றுப் பிழைப்புக்குப் பொதுநல வேஷம் போட்டுக் கொண்டு திரியும் மற்ற எந்த அரசியல் கட்சியும் திருந்துவதற்கு வகையில்லாமலே போய்விட்டது.

மற்றும் வாழ்வுக்கு யோக்கியமான வகையற்ற, உழைப்பதற்குப் பால்மாறும் சோம்பேறித் தனம் கொண்ட இளைஞர்கள் பெரும்பாலோர் இந்த வயிற்றுப்பிழைப்புப் "பொதுநல"க் கட்சிகளில் ஈடுபடவே துடிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நபர்களுக்குக் கொள்கைகளெல்லாம் மக்களை ஏமாற்ற வகைதேடி ஏமாறச் செய்வதேயாகும்.

ஆளும் கட்சி தாங்களும் மக்களை ஏமாற்றிப் பதவி தேடிக்கொண்டு, மற்றவர்களையும் இந்த வழியைப் பின்பற்றும்படி செய்துவிட்டதால் பொதுமக்கள் தரமும் குறைந்து விட்டதால் நாட்டில் இம்மாதிரி இழிவான வகையில் பிழைப்பவர்களை வெறுக்க – திருத்த ஆளில்லாமல் போய்விட்டது.

எனவே இன்று நம் நாட்டு மக்கள் நிலை பூனை இருக்கும் வீட்டில் எலி வாழ்வது போல் வாழவேண்டியது மக்கள் வாழ்க்கை நிலையாக ஆகிவிட்டது.

இது திருத்தமடைய வேண்டுமானால் அரசியல் கட்சிகள் ஏற்பட வேண்டிய நிலை இல்லாமலும் சட்டசபைத் தேர்தல் முறை இல்லாமலும் இருக்கத்தக்க ஓர் ஏக நாயகத் தன்மை ஏற்படவேண்டும், ஏற்படுத்தப்பட வேண்டும். ஏகநாயகத்தில் அதிகமான ஊழல், மோசடி, ஒழுக்கக்கேடு நீதிக்கேடு முதலிய நடவடிக்கைகள் பெரிதும் இடம் பெறமுடியாது பொருள் கொள்ளை போவதோ நாசப்படுத்தப் படுவதோ பொருப்பின்றிப் பல பேருக்குத் தாட்சண்யம் சலுகைக் காட்டி நீதி நேர்மை இல்லாமல் நடக்கவேண்டிய அவசியமோ ஏற்பட இடம் இருக்காது.

கட்சி, தேர்தல், மெஜாரட்டி, ஜனநாயகம் என்பதெல்லாம் கூட்டுக் கொள்ளை மாதிரி அராஜக ஆட்சி நடைபெறத்தான் இடமளிக்கும். ஆகவே ஜனநாயகம் என்பது ஆளுவோருக்கு நல்ல கொள்ளை வாய்ப்பும், ஆளப்படுவோருக்குப் பெருங்கேடும் அளிக்கத்தக்கதாகும். என்பதோடு ஜனநாயகத்தில் நீதி செலுத்த ஒருநாளும் முடியாது என்றே சொல்லுவேன்.

அந்தம்மாவும் நானும்

<✶▭✶>

தூங்கும் என்னை விழிக்க வைத்தன;
நாரணன் பாட்டும் நாய்க் குரைப்பும்!
நல்லதோர் மார்கழி நாள்அன்றோ அது?

மின்விளக் கேற்றினேன் வெள்ளைத் தாளும்
இறகும் அண்டையில் இருத்தல் கண்டேன்.
என்மனக் கோயில் திறந்தேன் இனிய
பொன்முகம்; புதிய தமிழகம் கண்டேன்.

அன்னை கூறினுள்: முன்னோநா ளைவிட
இந்தப் பொங்கல்நாள் ஏற்றம் உடையது.
கெடுதலை நீக்கி விடுதலை ஆக்கத்
தேரோட்டும் ஈரோட்டுப் பெரியவன் திறத்தை
உணரா மக்களும் உணர்ந்துபின் பற்றினர்.
போரிலோர் புதுமுறுக்குக் காணு கின்றேன்
என்று சொன்னுள்! "இலக்கியம் மாற்றினர்
இந்தி கொணர்ந்தனர் இனவர லாற்றின்
வேரை அழிக்க வேண்டுவ செய்தனர்
இனத்தைக் காட்டிக் கொடுப்பவர், இனிய
தமிழைக் காட்டிக் கொடுப்பவர் தழைந்தனர்
எழுச்சி தடைப்ப டாதோ என்றேன்.
தடைப்பட வில்லை. கவலை தழைத்ததால்
புலவர்பால் உணர்வு பூத்தது; ஒற்றுமை
காய்த்தது; எழுச்சி கனிந்த தன்றோ!
செந்தமிழ்ப் புலவன் வெள்ளை வாரணன்
அருளிய தொல்காப் பியஆராய்ச்சி
அஞ்சுதல் சிறிதும் இல்லா அருள்மிகு
நெஞ்சப் படைப்பு! நாட்டுக் கன்பளிப்பு!

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய

என்பது முதலிய பதினைந்து செய்யுள்
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தில்
இடைச் செருகல்என் றெடுத்துக் காட்டிய
யானைக்குக் கைம்மாறு வானும் போதாது
தே. போ. மீக்கள் செய்யும் தீமையில்
விளைந்த உணர்ச்சி வெள்ளப் பயன்இதே!
இதோகாண் புலவர்கள எழுகின் றூர்கள்!

மற்ருென்று கேட்பாய்! — கற்றும் கேட்டும்
தினத்தந் தியினுல் செல்வம் சேர்த்தும்
வருமொரு தமிழன் ஆதித்தன் என்பான்
பார்ப்பான் நட்புப் பட்ட காரணத்தால்
தம்மி னின்று நீக்கினர் தமிழர்!
அதனுல் அந்த ஆதித்த னென்பான்
தமிழர் தலைவனைத் தமிழக வேந்தனை
அடைந்தா ருகி அழுதா ருகி
என்கூட் டத்திற்கு நின்னருள் வேண்டும்
என்றனன். சரிதான் என்ருன் தந்தை.
தமிழர் உள்ளப்பாங்கு தன்னையும்
அன்னுர் எழுச்சியின் அளவையும் காண்க.
என்ருள் அன்னை! மகிழ்ச்சி எய்தினேன்.
ஆயினும் என்றன் ஐயப் பாடுகள்
அகல வில்லை அறிக்கை செய்தேன்:
''பார்ப்பனர் தமிழர் பகைவர்'' என்றேன்
உண்மை என்றே அன்னை ஒப்பினுள்
பார்ப்பா னுக்குத் தமிழ்மகள் பயந்த
தீயனுல் நாட்டுக்கு நன்மை உண்டா
என்றேன் அன்னை இயம்பு கின்ருள்;
பார்ப்புக்குப் பிறந்தோன் பகைவன்; அன்னேன்
தீர்ப்புக் கடங்கித் திரிவரும் தீயரே
வள்ளுவன் திருக்குறள் ஆணை! அவர்களால்
எள்ளுமுக் கத்தனை நன்மையும் இந்நாட்டுக்கு
இல்லை இல்லை என்ருள் அன்னை!

அன்னையே இன்னுமோர் அறிக்கை: நாட்டை
ஆளவந்தார் தமிழரே ஆயினும்
மாள வந்த பார்ப்பன மக்களை
ஏறவிட்ட தென்ன என்றேன்.
வீழ்த்துமுன் காட்டும் 'விரகே' என்ருள்.
இதற்கிடை என்னரும் பேர்த்தியும் பேரனும்
தூக்கமா என்றனர். நாட்டுக்கு
ஆக்கம் நேருமுன் தூக்கமே திங்கே?

'விரகு' — உபாயம் என்பர் வடவர்.

அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே

இதுதொல்காப்பியத்தில் இடைச்செருகலே
— புலவர் வெள்ளைவாரணர்.

மானம் மறையா மெல்லுடை!

(அகவல்)

இம்முறை புதுமுறை என்றே எண்ணி
மெய்ம்மானம் மறையா மெல்லுடை பூண்டு
கண்ணுடி தன்னெதிர் நின்றுடல் கண்டே
உள்நிலே ஒடிய ஒதுங்கும ஒண்டொடி
என் மகளே என்றெதிரில் வந்ததன்
அன்னே காணவும் நாணிப்
பொன்னுடல் போர்த்தனள் கைகால் கொண்டே!

வண்ணனை மொழி நூல்

ஞா. தேவநேயப்பாவாணர் M. A., M. O. L.

இன்று தனிக் கலையாக வழங்கியும் வளர்ந்தும் வரும் மொழிநூல் 18-ஆம் நூற்றுண்டில் மேனுடு களில் முளைத்தெழுந்த தேனும், அதற்கு வித்து தமிழ் நாட்டில் கி. மு. 7-ஆம் நூற்றுண்டிற்கு முன்பே இடப்பட்டதென்பது,

> "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"
> "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்று."
> "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
> றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே."
> "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களால் (640, 877, 880, 884) உணரலாகும்.

மேனுடுகளில் கடந்த முந்நூற்றுண்டுகளாக வளர்க்கப்பெற்றுவரும் மொழிநூல், தொடக்கத்தில், ஆங்கிலத்தில், (Science of speech, Science of Language, Linguistic science, Linguistics, Glottology, Philology எனப்) பல பெயர்களைப் பெற்றிருந்தது. இவற்றுள் (Linguistics, Philology என்னும்) இரண்டே இறுதியில் நிலைபெற்றன.

மொழிநூல், ஒரே சமயத்தில், வரலாறு தழுவியதாகவும் ஒப்புநோக்கியதாகவும் பலகூறு களாகப் பகுக்கப்படாததாகவும் உள்ளது. மாக்சு முல்லர் (Max Muller) விற்றினி (Whitney) செசுப் பெர்சென் (Jespersen) முதலிய மொழி நூற் பேரறிஞரெல்லாம் மேற்கூறிய முறையிலேயே மொழி நூலை வளர்த்து வந்தனர். ஆயின், அண்மை யில், சில மேலைமொழி நூலறிஞர், சிறப்பாக அமெரிக்கர், மொழிநூலை,

1. வண்ணனை மொழிநூல் (Descriptive Linguistics)
2. வரலாற்று மொழிநூல் (Historical Linguistics)
3. ஒப்பியல் மொழிநூல் (Comparative Linguistics)

எனமுக்கூறுகப் பகுத்து, அவற்றுள் வண்ணனை மொழிநூலையே சிறப்பாக வளர்த்து வருகின்றனர். இதன் பல குறைகள் உண்மைக்கு மாருகவும் தமிழுக்குக் கேடாகவும் உள்ளன. அவையாவன:—

1. வரலாறு தழுவாதது

வரலாறு எக்கலைக்கும் அடிப்படையாய் மட்டு மன்றி முதுகந் தண்டாயுமுள்ளதென்பது, உல கறிந்த உண்மை. கலைகளுள்ளும், மொழிநூல் வர லாற்றியலை இன்றியமையாது தழுவியதென்பது சொல்லாமலே பெறப்படும். ஆயினும், வரலாற்றுத் தொடர்பின்றி உண்மை தழுவாத உயிரற்ற நிலை யில் வண்ணனை மொழிநூல் வளர்க்கப்பட்டு வரு கின்றது. இது, அந்நூலாரின் முயற்சியின்மை, கலையுணர்ச்சியின்மை, நடுநிலையின்மை ஆகிய வற்றுள் ஒன்றையே காட்டும்.

2. ஆரிய அடிப்படை கொண்டது

முந்தியல் செம்மொழியாகிய தமிழை **ஆராயாமையால்,** மொழிநூல் திறவுகோல் தமிழி லேயே பொதிந்து கிடப்பதை அறியாது, திரிபில் **திரிபும் செயற்கையில்** செயற்கையும் ஆரியத்தின் முடியுமாகிய சமற்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டு, மொழிநூற்செய்திகளையும் மொழிகளையும் மொழியுறுப்புக்களையும் முன் பின்னுகவும் கீழ் மேலாகவும் முறை பிறழக் கூறிவருவது வண்ணனை மொழி நூல்.

தமிழ் ஆரியத்தின் அடி என்பதை இன்னும் மேலையர் உணர்ந்திலர்.

3. எல்லா மொழிகளும் இடுகுறித் தொகுதி களே என்பது

தமிழ்போலும் இயன்மொழியை ஆராயாது ஆரியமாகிய திரிமொழிகளையே ஆய்ந்ததினுல், எல்லாமொழிச் சொற்களும் இடுகுறிகளேஎன்னும் தவருனமுடிவிற்கு வந்துள்ளனர் இற்றைஅமெரிக்க மொழி நூலாசிரியர்.

தமிழில் இடுகுறிச் சொல்லே இல்லையென்பதற்கு, "எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே." என்னும் தொல்காப்பிய நூற்பா வொன்றே போதிய சான்ரும். "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்ரு." என்பது, சொல் வேர்ப் பொருள் பார்த்தவுடன் அல்லது மிகத் தெளிவாகத் தோன்ருது (சில சொற்களில்) எனப் பொருள்படுமேயன்றி, திரு. வையாபுரிப்பிள்ளை கூற்றுப்போல் தோன்றவே தோன்ருது எனப் பொருள்படுவதன்று.

இயற்சொற்களில் தெளிவாகத் தோன்றும் வேர்ப்பொருள் திரிசொற்களில் மறைந்துபோம் என்னும் உண்மையைக் கீழ்க் குறித்த சொற்களினின்று அறிக

இயற்சொல்	திரிசொல்
இடைகழி	ரேழி
வெண்ணெய்	வென்ன (தெலுங்கு)
Episcope	Biscop

மொழி தோன்றிய வகையை விளக்கி நிற்பது உலக முழுமையினும் தமிழ் ஒன்றே.

4. சொற்கள் தம்மளவிற் பொருளுணர்த் தாது அவற்றின் முறைப்பாட்டினுலேயே பொருளுணர்த்துவன என்பது.

இது மொழி தோன்றிய முறையை அறியாமையால் நேர்ந்த தவருகும்.

இக்காலத்தும், குழைந்தைகளும் நோயாளியரும் அயன்மொழித் துவக்க மாணவரும் சில வேளைகளில் ஒரு சொல்லாலேயே தம் கருத்தைத் தெரிவித்தல் காண்க.

5. ஆயிரம் ஆண்டிற்கொரு முறை நூற்றிற்குப்பத்தொன்பது விழுக்காடு எல்லாச் சொற்களும் மாறிவிடுகின்றன என்பது.

எல்லா மொழிகளிலும், அடிப்படைச் சொற்கள் உட்பட, ஆயிரம் ஆண்டிற்கொரு முறை நூற்றுக்கு 19 மேனி எல்லாச் சொற்களும் வழக்கற்றுப் புதுச்சொற்கள் தோன்றுகின்றன என்று அமெரிக்க மொழி நூலார் கொண்டு, இவ்வடிப் படையில் சொன்மாற்றக் காலக்கணிப்பு (Glotto chrorology) என ஒரு கணிப்பு முறையும் வகுத்திருக்கின்றனர். அது வருமாறு:—

"ஒரு மொழி இருகிளைகளாகப் பிரிந்துவிடின், ஆயிரம் ஆண்டிற்குப் பின் ஒவ்வொன்றும் மூலச் சொற்ருெகுதியில் நூற்றிற்குப் பத்தொன்பது இழந்துவிட்டு, எண்பத்தொன்றேகொண்டு நிற்கும். மூலச் சொற்கள் 200 ஆயின், ஒவ்வொன்றிலும் 162 எஞ்சிநிற்கும். ஆயின், ஒரே சொற்ருெகுதியை இரண்டும் இழக்கும் என்று கருதக் காரணமில்லை, ஒன்று இன்னென்று கொண்டு நிற்பதிலும் இழந்ததிலும் தனித்தனி நூற்றுக்கு 81 தாங்கி நிற்கும் என்பது பெரும்பால் நிகழக் கூடியது. இங்ஙனமாயின், ஒவ்வொன்றும் மூலப்பொதுச் சொற்ருெகுதியில் 132 அல்லது நூற்றுக்கு 66 கொண்டு நிற்கும். இக்கணிப்பின்படி, இருமொழிகளில், அடிப்படைச் சொற்ருெகுதியில் நூற்றுக்கு 66 இனச் சொல்லாயிருந்தால் அவை பிரிந்துபோய் ஆயிரம் ஆண்டாயிற்றென்றும். 44 இனச் சொல்லாயிருப்பின், பெரும்பாலும் ஈராயிரம் ஆண்டாயிருக்குமென்றும், அறிந்து கொள்ளலாம்."

இக்கணிப்பின்படி ஒவ்வொரு மொழியும் ஐயாயிரம் ஆண்டிற்குள் முற்றும் மாறிவிட வேண்டும். கி. மு 7-ஆம் நூற்ருண்டில் தோன்றிய தொல்காப்பியம் இற்றைக்கு 2500 ஆண்டுகட்கு முந்தியது. அதிலுள்ள உலக வழக்குச் சொற்கள் அத்தனையும் இன்றும் தமிழ் நாட்டில் வழங்கி வருவதோடு,

"அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு"
தொல் - 31.

"நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி"
தொல் - 43.

"பன்னி ருயிரும் மொழிமுத லாகும்."
தொல் - 59.

என்பன போன்ற எத்துணையோ நூற்பாக்களும், இற்றை முறையில் அமைந்து எல்லாரும் எளிதுணரக்கிடக்கின்றன. இதனுல், மேற்காட்டிய அமெரிக்கச் சொன்மாற்றக் காலக் கணிப்பு முற்றும் புரைபட்டதென்க.

6. எல்லா மொழிகளும் திருந்தியவையே என்பது

"இயன்மொழியென்றும் திரிமொழியென்றும், திருந்தியமொழியென்றும் திருந்தாமொழியென்றும், மொழிகட்குள் பாகுபாடில்லை. எல்லாம் திருந்தியவையே, சுருட்டு என்பது தெலுங்கில் சுட்டு என்றிருப்பின், அதற்கு அது சரியே. பொன் என்பது கன்னடத்தில் ஹொன்னு என்றிருப்பின்,

அதற்கு அது திருந்தியதே.'' இவ்வாறு கொள்வது வண்ணனை மொழி நூல்.

''உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்குப் பொல்லாப்பு.'' தெலுங்கு கன்னடம் முதலியவை தமிழின் திரிபு என்றால், தெலுங்கர்க்கும் கன்னடருக்கும் வருத்தம் பிறக்கும். ஆதலால், கோமுட்டிச் செட்டிபோல் இருசாரார்க்கும் பொதுவாகக் கூறுவது சிறந்தமுறை என்பது, வண்ணனை மொழி நூலார் கருத்து. இம்முறையொட்டிச் சில தமிழ்ப் பேராசியரும், திரவிடம் என்பது, தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய பல மொழிகளின் தொகுதிப் பெயர். அவையெல்லாம் ஓரினமொழிகள் என்று கொள்வதல்லது. தமிழ் பிற திரவிட மொழிகளின் தாயெனக் கூறுவது பொருந்தாது,'' எனக் கட்டுரைப்பர்.

தனிப்பட்டவர் செய்திகளில் ஒருவர், ஒருவர் குற்றங்குறைகளை மறைக்கலாமேயன்றி, ஒரு நாட்டு மக்களெல்லார்க்கும் பொதுவான மொழித்துதுறையிலும் கலைத்துறையிலும் குற்றங்குறைகளை மறைப்பது பண்பாடன்று.

7. இலக்கணத்தைப் பழிப்பது

எல்லா முதுமொழிகளிலும் இலக்கண நூல்கள் அழகிய முறையில் அறிஞரால் இயற்றப் பெற்றுள்ளன. அங்ஙனமிருப்பினும், அவற்றின் அருமையறியாது, அவற்றை வரைதுறையின்றிப் பழித்து, மாணவரை மயக்குவனவும் பொருட்சிறப்பற்றனவும் ஓரீறு கொண்டனவும் ஒன்றையொன்று பற்றுவனவுமான பல குறியீடுகளைப் புதிதாய்ப் படைத்து அவற்றைச் செவ்வையாய் விளக்கவும் இயலாது இடர்ப்படுவது, வண்ணனை மொழிநூலாசிரியர் வழக்கமாக இருந்து வருகின்றது. இது மிகப்பரந்த செய்தியாதலின், இதை விரிக்காது இம்மட்டில் நிறுத்துகின்றேன்.

8. ஒலிக்குறிகளை (Phonetic Symbols) அளவைப் படுத்தாதது.

வண்ணனைமொழி நூலாரால் ஒப்புக்கொள்ளப் பெறும் பல எழுத்தொலி நூல்கள், வெவ்வேறு குறிகளைக் கையாண்டுள்ளன. அவற்றை இன்னும் ஒரு நெறிப்படுத்தியிலர்.

ஒருவர் எல்லா மொழிகளையும் தாய்மொழியாகவுடையார் போன்றே பேசவியலும் என்பது, வண்ணனை மொழி நூற்கொள்கையர் தருக்கு. ஆயின், இதுகாறும் ஒருவரும் அதனை மெய்பித்துக் காட்டியிலர்.

9. கிளை வழக்கைப் பெருக்குவது

இடவழக்கும் குலவழக்கும் பற்றி ஒவ்வொரு பெருமொழியிலும் சிலகிளைவழக்குகள் (Dialects) ஏற்படுவது இயல்பே. ஆயின். ஞாலவியற் கிளை வழக்கு (Geographical Dialect) என்றும், ஊர்க் கிளை வழக்கு (Dialect of a village town or city) என்றும், கூட்டரவியற் கிளைவழக்கு, (Social Dialect) என்றும், குடும்பக் கிளை வழக்கு (Family Dialect) என்றும், தனிப்பட்டவர் கிளைவழக்கு (Individual Dialect) என்றும், வண்ணனைமொழி நூலார் வரம்பின்றி வகுத்துக்காட்டுவது வியப்பினும் வியப்பே.

10. பேசுவதே மொழி என்பது

பேச்சு வழக்கிலுள்ளதே உண்மையான மொழியென்றும், எழுத்து வழக்கிலுள்ளதெல்லாம் ஏட்டு மொழியேயென்றும், திருந்திய வழக்கென்றும் கொச்சை வழக்கென்றும் வேறுபாடில்லையென்றும், கொச்சை வழக்கு எவ்வளவு கேடாய்த் திரிந்திருப்பினும் அதெல்லாங் கொள்ளத் தக்கதேயென்றும், வண்ணனை மொழி நூலார் ஏனைத்திரிபுடை மொழிகட்குக் கூறுவதுபோன்றே இயன்மொழியும் இலக்கணச் செம்மொழியுமாகிய தமிழிற்கும் கூறுகின்றனர்.

பிற மொழிகட்கில்லாத செம்மையென்னும் வரம்பு தமிழுக்குண்மையையும், இடைக்காலத்தில் தமிழ் ஆரியத்தால் அழிப்புண்டதையும், இக்காலத்தும் தமிழ் வளர்ச்சி பகைவரால் தடுப்புண்டு வருவதையும், அவர் அறியார்.

தமிழில் ஒருவன் எங்ஙனம் பிழைபடப் பேசினும், மேடையேறிப் பேசுங்காலும் ஏடெடுத்தெழுதும் போதும் இலக்கண நடையைக் கையாள வேண்டுமென்பது தொன்று தொட்டுவரும் மரபு.

"எப்படி எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.''

தமிழ்நாட்டில் மிகக் கொச்சையாய்ப் பேசப்படும் மாவட்டம் வடார்க்காடு. அங்கும் அங்கத்து நடையில் மேடையேறிப் பேசுவாரும் நூலெழுதுவாரும் ஒருவருமிலர். இத்தகைய வரம்புண்மையாலேயே தமிழ் இன்றுவரை இருந்து வருகின்றது.

இடைக்காலத்தில், தமிழ் சிதைக்கப்பட்டமையாலும்; தமிழ்க்காவலரான புலவர் பிழைப்பற்றுப் போனமையாலும், நூற்றுக்கணக்கான அருந்தமிழ்ச் சொற்கள் மறைந்து வேற்று மொழிச் சொற்கள்

வேண்டாது புகுந்து விட்டன. இதனால், முகில், எழிலி, மஞ்சு, கார், மால், வான் எனப்பலசொற்கள் இருப்பவும், மேகம் என்னும் வடசொல்லே வழங்கவும், முகில் என்னும் தன் சொற்கு மேகம் என்னும் அயற் சொல்லாற் பொருள் கூறவும் நேர்ந்து விட்டது. இது தமிழர் விரும்பி மேற்கொண்ட நிலைமையன்று. ஆண்கள் பெண்கள் என்னும் வழங்கு தமிழ்ச்சொற்கட்குப் பதிலாகப் புருஷர் ஸ்திரீகள் என்னும் வழங்கா வடசொற்களைப் புகைவண்டி நிலையங்களிற் புகுத்தியிருப்பதும், வானொலி என்பதை ஆகாசவாணி என்று மாற்றியிருப்பதும், தமிழைக் கெடுத்தற்கும் அதன் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் சிறந்த எடுத்துக் காட்டுக்களாம்.

தமிழர் தக்க வழிகாட்டியின்றித் தாய்மொழி புணர்ச்சியற்றுப்போய், ஏற்கனவே காற்பங்கு வட சொற்களைக் கலந்ததொடு இன்று அரைப்பங்கு ஆங்கிலச் சொற்களையும் கலந்து, இடையிடை பாரசீகம் அரபி முதலிய பிறமொழிச் சொற்களையும் பெய்து, கலவை நடையாக வழங்கும் கசட்டுமொழி, பல்லாயிரம் ஆண்டுகளாகப் பண்படுத்திச்சீரியோர் வளர்த்த செந்தமிழாகுமோ!

வேலையில்லாத் திண்டாட்டம் மிக்க இக்காலத்தில், இளைஞர் சிலர் தம் தகுதியைப் பெருக்கி வருவாயை யுயர்த்த வையாபுரிகளை வழிபட்டு வட அமெரிக்கா சென்று ஈராண்டிருந்து மீண்டு, ஆராய்ச்சியென்னும் பெயரால் அருந்தமிழைக் குலைத்து வருவது எத்துணை இரங்கத் தக்க செய்தி!

அவர்கள் என்னும் சொல்லின் கொச்சை வடிவுகளான அவக, அவுக, அவிக, அவிய, அவியல் அவங்க, அவுங்க, அவிங்க, அவா என்பவற்றையெல்லாம் அளவைவாகக் கொண்டு ஆராய்வதினும், நகராண்மைக் குப்பையைக் கிண்டிக் கிளைப்பது நன்மைபயக்குமே!

தமிழைத்தமிழ்நாட்டில் தக்கார் வாய்க்கல்லாது அமெரிக்கா சென்று ஆய்வதற்குத் தமிழொலிகளைத் தவறாக வையாபுரிகள் வாய்க்கேட்டுப் பதிவு செய்த ஒலிப்பெட்டிகளன்றி வேறு அங்கு என்னுள்ளது? உலக வழக்கும் செய்யுள் வழக்கும் ஆராயாது சில ஒலிக்குறிகளை மட்டும் அமெரிக்காவிற் கற்றுவந்ததினால் என்ன பயன்? அக்குறிகளை இங்கிருந்தே கற்கலாமே!

தமிழர் பேசுவதெல்லாம் தமிழெனின், ஸ்கூல், காலேஜ், கிளாஸ், டிவிஷன், பீரியடு, ஹெட் மாஸ்ட்டர், சார், (Sir) புக், கோட்புக், பேப்பர் பென், பென்சில், ரப்பர், பேக்கு, (bag) கார்டியன், லீவு, லேட் (Late), டிராயிங், சயன்சு முதலியசொற்களெல்லாம் தமிழாதல் வேண்டுமே! அங்ஙனமாயின், தமிழ் ஆங்கிலத்தின் கிளைமொழியாகவன்றோ மாறிவிடும்! அங்ஙனம் மாறாமை அனைவரும் அறிவர். ஆதலால், இடைக்காலத்திருண்ட நிலையில் ஏற்பட்ட கேட்டையும் அதன் வழிவந்த தீங்குகளையும் அறவே நீக்கி, தமிழைப் பண்டுபோல் தூய்மைப் படுத்துவதே, அறிவாராய்ச்சியும் உரிமையுணர்ச்சியும் மிக்க இற்றைத் தமிழர்க் கேற்றதாம்.

இனி, மலைவாணரான் திரவிடரெல்லாம் பழங்குடி மக்களென்றும், அவர்கள் பேசுவன முந்தியல் மொழிகளென்றும், தமிழ் வல்லினம் வடமொழி ஐவருக்கமுதலொலிகளை யொத்ததென்றும், தமிழ் அரிவரி வடமொழி நெடுங்கணக்கைப் பின்பற்றியதென்றும், சில தவறான கருத்துக்கள் மேலைமொழி நூலறிஞரிடைத் தோன்றுதொட்டு இருந்துவருகின்றன. இவற்றையெல்லாம் மறுப்பின் மற்றொன்று விரித்தலாகும்.

ஆயினும், குறிஞ்சி நிலத்திலுள்ள மாந்தர் தமிழர் நாகரிக வளர்ச்சியின் முதல் நிலையைத் தாங்கி நின்ற காலம் முழுகிப்போன குமரிக்கண்டத்திலேயே கடந்து விட்டதென்றும், இற்றை நாவலந்தேய மலைவாணரெல்லாம் மலையடிவாரத்தில் மாடுமேய்த்தும் உழவுத்தொழில்செய்தும் வந்து அக்காலத்து அடிக்கடி நிகழ்ந்து வந்த போருக்கும் கொள்ளைக்கும் தப்புமாறு மலைமேற்சென்று வாழ்ந்தவர் வழியினரென்றும்; தமிழ் வல்லின வொலிகள் வடமொழி ஐவருக்க முதலொலிகளினும் மெல்லியவென்றும்; தமிழ் நெடுங்கணக்கே வடமொழி நெடுங்கணக்கிற்கு மூலமென்றும்; ஈண்டைக்கறிந்து கொள்க.

இதுகாறுங் கூறியவற்றால், வரலாற்றைச் சிறிதும் நோக்காது, வடமொழியைத் தலைமையாகவும் திரவிடமொழிகளையெல்லாம் ஒன்றோடொன்று சமமாகவும் கொண்டு, தமிழுக்குக்கேடு விளையுமாறு கொச்சைச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் அளவைப்படுத்துவதே வண்ணனை மொழிநூலின் இயல்பென்றும், இது தமிழைக் காட்டிக் கொடுத்துத் தந்நலம் பெருக்கும் வையாபுரிகட்குத் தலையாய வாய்ப்பென்றும், கண்டுகொள்க.

ஆடல்

வித்வான், பா. முத்து

மேடையில் வந்து நின்றாள்
மெல்லிய உடைய ணிந்து
கோடையின் வெப்பம் போக்கும்
குளிர்தென்றல் போலோர் மங்கை!
ஏடவிழ் மரையை ஒத்த
எழில்முகம் தாழ்த்திக் காட்டி
ஆடலைத் தொடங்கு முன்னர்
அனைவர்க்கும் வணக்கம் செய்தாள்!

பண்சேர்ந்த தமிழ்ப்பாட் டொன்றைப்
பாடினாள்; விண்அ ரம்பை
மண்சேர்ந்தாள் என்று சொன்னார்
மன்றிடை இருந்தோர்; வண்டாம்
கண்சேர்ந்தே அங்கும் இங்கும்
களிநடம் ஆடும்; நல்ல
விண்சேர்ந்த நிலவு வந்தென்
விழியெதிர் ஆடல் கண்டேன்!

மேலாடை ஆடக் கொங்கை
மிளிர்முத்து வடங்கள் ஆட,
நூலாடல் போல வாடும்
நுண்ணிடை ஆட, வண்ணச்
சேலாடக் கைகால் ஆடச்
சிலையன்னாள் ஆட லானாள்!
மாலாட உள்ளந் தோறும்
மன்றாடும் காட்சி என்னே!

சடைகாட்டக் கரும்பாம்(பு) ஒன்று
சட்டெனத் தோன்றும்; கண்வாட்
படைகாட்டும், வேலைக் காட்டும்,
பல்பொருள் விளக்கம் காட்டும்;
இடைகாட்டும் கார்வான் மின்னல்;
ஏந்திழை நடையோ அன்னப்
பெடைகாட்டும் பிடியைக் காட்டும்
பெட்பெலாம் விளக்கிக் காட்டும்!

கால்தூக்கி ஆட லானாள்;
காதெலாம் சதங்கைச் சத்தம்,
வேல்தூக்கி உள்ளந் தோறும்
விழிகளோ பாய்ச்சும்; இன்பப்
பால்தூக்குத் தமிழ்ப்பாட் டொன்றைப்
பனிமொழி பொருளுக் கொப்ப
மேல்தூக்கிப் பாட எங்கும்
மெல்லிசை வெள்ளம் பாயும்!

கையசைந் தாடு கின்ற
கவின்விரல் பவழக் காம்பு
வையுகிர் கிளிச்செம் மூக்கு
வனப்பிடை ஈயார் சொல்லாம்;
பையவே அசையும் அந்தப்
படர்கொடி முல்லை யாளின்
மெய்யசை வெல்லாம் பாம்பின்
மெல்லுடல் நெளிவே யம்மா!

மலையொத்த தோளான் வந்தே
மன்றிடை நின்றான்; தங்கச்
சிலையொத்தாள் எதிரில் நின்றே
சிவந்தனள், நாணால்; பின்பு
வலையொத்த கண்ணை வீச
வந்தவன் விழுந்தான்; உள்ள
நிலையொத்தார்; பேச்சோ இல்லை
நின்றுகூத் தாட லானார்!

அங்கத்தின் அசைவில் தோன்றும்
அணங்கவள் அழகும்; நல்ல
சங்கத்துத் தமிழும் பண்ணும்
சதங்கையின் ஒலியும் சேர்ந்து
சிங்கத்தைப் புலியை ஒத்த
செந்திறல் மறவர் நெஞ்சில்
பங்கத்தை விளைக்கும் என்றால்
பாவையின் கூத்தென் சொல்வேன்!

மெல்லடி நோக நோக
மிதித்துக்கூத் தாடும் போது
கல்லெனச் சதங்கை ஆடல்
கள்வர்கள் வீட்டுள் நல்ல
வல்லிருட் போதில் வாயில்
காப்போனை மீறிச் சென்று
அல்லலை விளைக்கக் காப்போன்
அரற்றுதல் போன்ற மாதோ!

பண்வைத்துப் பாட லானார்
பைந்தமிழ்த் துறைப்பாட் டொன்றை
எண்வைத்தே இசையும் வைத்தே
எழிற்றாள வகைகள் வைத்தே
கண்வைத்த நெறியி லெல்லாம்
கருத்துக்கள் வைத்து வைத்தே
மண்வைத்த கொடியோன் றாட
மனம்வைத்துப் பார்த்தார் மக்கள்!

தமிழ்நாட்டின் விடுதலை

கடலூர், வீரமணி, M. A.

தமிழ் நாடு விடுதலை அடைய வேண்டும்; தன் மானத்துடன் வாழத் தமிழர்களுக்கு வழிவகை செய்ய வேண்டும்; உரிமையும், பெருமையும்பெற்ற நாட்டவர்களாகத் தமிழர்கள் உலகத்தார் கண்முன் காட்சியளிக்க வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டுதான் தமிழர்களின் தனிப் பெருந்தலைவர் தந்தை பெரியார் அவர்கள் 1938 முதலே நாட்டு விடுதலைக்காகப் போராடி வருகின்றார்கள்.

"நாடு பிரியக்கூடாது" "பிரிவினை கேடு பயப்பது" என்றெல்லாம் பித்தலாட்டமாகப் பேசுகிறவர்கள் தரும் வாதங்கள், எடுத்துக் காட்டும் காரணங்கள், சொத்தையானவை; ஓட்டையானவை. அவைகளிற் சில:

1. இந்தியா ஏக இந்தியா; பாரத மாதாவைத் துண்டு போடக் கூடாது.

2. கலாச்சார ஒருமைப்பாடு வேற்றுமைகளில் ஒற்றுமை காணுதல் என்ற தத்துவத்தின்படி (unity in Diversity) காணப்படுகிறது. வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் உள்ளது.

3. பிரிந்தால் ஆபத்து. சிறிய நாடாகிவிடும். தமிழ் நாட்டிற்குப் பாதுகாப்பின்மை ஏற்பட்டுவிடும்.

இப்படிச் சொல்லுவதன் மூலம் தங்களுக்கு இருக்கும், உலக அறிவையோ, அனுபவத்தையோ, அரசியல் ஞானத்தையோ அவர்கள் காட்டிக் கொண்டவர்களில்லை. அறியாமையைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

முதல் வாதத்தை எடுத்துக் கொண்டு ஆராய்வோம்:

வரலாற்றுப்படியும், நிலநூல் (பூகோளம்) படியும் பார்த்தால், இந்தியா ஒரு நாடு அல்ல. ஒரு துணைக் கண்டம். அதாவது பல நாடுகளைத் தன்னகத்தே அடக்கியுள்ள ஒரு கண்டம். அய்ரோப்பாக் கண்டத்தில் உள்ள ரஷ்ய பகுதியை நீக்கிவிட்டால், எஞ்சியுள்ள அய்ரோப்பாவின் பரப்பு இந்தியாவின் பரப்புக்குச் சமம். அங்கு எத்தனை வேறுபட்ட மொழி, கலாச்சாரம், மதம், பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்கள் இருக்கிறார்களோ அதே போல்தான் இங்கும் இருக்கிறார்கள்.

வெள்ளைக்காரன் வந்து இந்தியா என்பதை ஒரு குடைக்குள் கொண்டு வருமுன் ஏதாவது எல்லை இதற்கு இமயத்திலிருந்து, கன்னியா குமரி வரை ஒரே நாடு என்று எந்தக் காலத்திலாவது இருந்திருக்கிறதா? இல்லையே.

புராண காலத்தில் கூட 56 தேச இராசாக்கள் வருகிறார்கள். வெள்ளையன் ஆண்டு விட்டுப் போகுந் தறுவாயிற் கூட 632 மன்னர்களும் அவர் தம் நாடும் இருந்தனவே. அவைகள் வாழவில்லையா?

பாகிஸ்தான் பிரிவினைக்கும் பிறகு "பாரத மாதா" வாழவில்லையா? தமிழ் நாடு பிரிந்த பிறகு வாழமாட்டாளா? அவள் வாழ்ந்தாலோ, வாழாவிட்டாலோ நமக்கென்ன?

2. கலாச்சார ஒருமைப்பாடு என்பது வெறும் புரட்டாகும் - வேற்றுமைகளில் ஒற்றுமை காணுவது என்பது எவ்வாறு இயலும்? உணவு, உடை, எல்லாவற்றிலும் நமக்கும் டெல்லிக்காரனுக்கும் எவ்விதத்தில் ஒற்றுமையுண்டு? தெற்கே இருப்பவன் வடநாட்டுக் கோயில்களான பூரி, செகன்னாத், காசி, பண்டரிபுரம் போவதும் வடக்கேயிருப்பவன் தென்னாட்டுக் கோயில்களான இராமேசுவரம், மதுரை, தஞ்சாவூர், சிதம்பரம், போவதும் கலாச்சார ஒருமைப்பாட்டை உண்டாக்கி விட முடியுமா?

பாகிஸ்தான் முஸ்லீமும், இந்திய முஸ்லீமும், வேறு நாட்டு முஸ்லீமும் மெக்கா, மெதினாவுக்கும் போவதால் அத்தனை நாடுகளில் கலாச்சார ஒருமைப்பாடு ஏற்பட்டுவிட்டது என்று கூறி ஒரே நாடுதான் அவைகள் என்று எல்லை காட்டமுடியுமா?

தமிழ் நாடு – தனி நாடாக – இன்றைய சென்னை இராஜ்ஜியம் 50000 ச. மைல் பரப்பையும் சுமார் மூன்றரைகோடி (350 லட்சம்) மக்களையும் கொண்டது.

அய்க்கிய நாடுகள் சபையில் 82 நாடுகள் உள்ளன, தனிக்கொடி, தனி அரசாங்கம், கொண்டவைகள் அவைகள். அதில் உள்ள 82 நாடுகளில் சுமார் 70-க்கு மேற்பட்ட நாடுகள் தமிழ் நாட்டின் பரப்பளவையும், மக்கள் எண்ணிக்கையையும் விடக் குறைந்த பரப்பும், மக்கள் எண்ணிக்கையும் கொண்டவைகள்.

அவைகளுக்கு என்ன ஆபத்து வந்து விட்டது?

உலக நாடுகளில் சில வியக்கத்தக்கவைகளாகப் பரப்பிலும் மக்கள் தொகையிலும் இருக்கின்றன.

லக்சம்பர்க் என்ற நாட்டின் பரப்பளவு 1000 ச. மைல். ஜனத்தொகை 311,000. அய். நா. சபையில் இடம் பெற்றுள்ள நாடாகும்.

சான்மாரியானு குடியரசாகத் திகழ்கிற ஒரு நாடு. அதன் பரப்பளவு 38 ச. மைல். ஜனத்தொகை 13,500. இந்நாடு கி பி 4-ம் நூற்றாண்டிலிருந்தே தனிநாடாகத்திகழ்கிறது. எவ்விதஆபத்துமில்லையே!

மானாக்கோ என்ற ஒரு நாடு இரண்டு மைல் நீளமும், அரை மைல் அகலமும் கொண்ட ஒரு நாடு - 360 சதுர ஏக்கர். அதன் ஜனத்தொகை 22000 பேர்தான்! தனி நாடுதான் எந்த ஆபத்து வந்து விட்டது?

சென்னை மாநிலத்தில் 13 மாவட்டங்கள் உள்ளன. அதில் சென்னை மாவட்டம் மாத்திரம் 49 ச. மைல் பரப்பும், 14.16050 மக்கள் தொகையையும் கொண்டது. அதைவிடச் சிறிதான நாடுகள் சுதந்திரமாக இருக்கின்றன என்றால் சென்னைராஜ்ஜியம் என்றுதற்போது சொல்லப்படும் இந்த மாநிலம் தனித்து வாழ முடியாதா?

ஆண்டு ஒன்றுக்கு ரூ 250 கோடி இராணுவத்திற்குச் செலவு செய்யும், இந்திய அரசினரால் தன்னைவிடச் சிறிய நாடான பாகிஸ்தானின் அதிக்கிரமத்தை அடக்க முடிகிறதா?

தமிழ் நாட்டின் பரப்பையும் விடச் சிறிய அளவில் உள்ள போர்த்துக்கல் (34,500 ச. மைல்) ஆதிக்கத்தின் கீழ் உள்ள கோவாவை தங்கள் உடமையாக்க இவர்களால் முடிந்ததா?

வெட்கமில்லாமல் தமிழ்நாடு பிரிந்தால் பாதுகாப்பு இருக்காது என்று கோவாகாரனிடமும், பாகிஸ்தான் காரனிடமும் உதை வாங்கிக் கொண்டிருப்பவர்கள் சொன்னால் உலகம் சிரிக்காதா?

தமிழ்நாடு டெல்லியிடம் அடிமையாக இருப்பதால் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டிற்கும் இன்ன நன்மை என்று எடுத்துக் காட்டுபவர்கள் நேருவிலிருந்து கக்கன்வரை, யாராவது உண்டா?

நாடு பிரிய வேண்டும் என்று நேருவையோ, பந்தையோ, டெல்லியாட்சியரைப் பார்த்து நாம் வேண்டவில்லை. ஏனெனில் விடுதலை என்பது பிறர் பார்த்து தரும் பொருள் அல்ல; நாமே தட்டிப் பறிப்பது என்பதாகும். புரட்சிக் கவிஞர் கூறுகிறார்,

"தருவதோர் பொருளோ உரிமை?
தருவதோர் பொருளெனில் மீண்டும்
பறிப்பதோர் பருப்பொருள் அதுவேயன்றோ.
வென்ற தோளோடு. மீண்டும்நம் தோள்என
குன்று சாடிய குருதி தோய்ந்த
வெற்றி நிலத்தில் விளைவதாம் விடுதலை
மற்றது கெடுதலை மற்றவர் மாட்சிக்கே."

அதன்படி தமிழ் நாட்டின் விடுதலையை தந்தை பெரியார் தலைமையின் கீழ்நின்று தட்டிப் பறிப்போம்!

தமிழர்களே ஒன்று திரளுங்கள்!

∞○○∞

கண்ணைக் கவரும் வண்ண ஆடைகளுக்கு
மிகச்சிறந்த இடம் எங்களுடையதே!
ப. செ. ராம. ராமசாமி செட்டியார்
சவுளி வியாபாரம்
125, கு. வடக்கு வீதி, குடந்தை

ஆனந்தம் சோப்
ஆடைகளை வெண்மை
ஆக்குவதில் சிறந்தது.

ஆனந்தா சோப்
பாக்டரி
சாக்கோட்டை P. O.
கும்பகோணம்.

சங்ககாலத்தில் இசைக்கலை

டாக்டர், மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Phd.

இசையின் சிறப்பு

இசை என்னும் சொல் இசைவிப்பது, தன் வயப் படுத்துவது எனப் பொருள் படும். இசை கல் மனத்தையும் கரைந்துருகச் செய்யும் வன்மை பெற்றது. கற்றோரும் மற்றோரும் இசைவயப்பட்டே திருவர். அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்ப்பது இசை. இசையைக் கேட்டு இன்புறாத உயிர்கள் இல்லை என்றே கூறலாம். விலங்குகள், பறவைகள், செடிகள், பாம்பு முதலான உயிர்கள் இசையில் இன்பம் அடைகின்றன. பால் வேண்டி அழும் பசுங்குழவியும் இசை வயப்பட்டுப் பாலுண்ணும்; பசியையும் மறந்து கண்கள் செருக மகிழ்ச்சி யடையும் இசையில் வயப்பாடாதவர் அன்பற்றவர் என்று கூறுதல் அமையும். இசை, வாழ்க்கையில் இன்பத்தை வளர்த்தலால் இசையின் அருமையை யும் பெருமையையும் எண்ணியே தமிழர் இசைத் தமிழை முத்தமிழில் நடுவில் வைத்துள்ளனர். தமிழ் இலக்கிய நூல்கள் இசைத்தமிழிலேயே உள்ளன.

பண்டைத் தமிழகத்தில் செய்யப் பெற்ற நூல் களில் பெரும்பாலன செய்யுள் வடிவிலே அமைந் தவை. பிற்காலத்தில் தோன்றிய கல்வெட்டுக்கள் பலவும் செய்யுளில் அமைந்தவையே. அவற்றுக்கும் பிற்படத் தோன்றிய அஞ்சல் வடிவில் அமைந்துள்ள சீட்டுக்கவிகளும் இருத்தலைக்காண, ஏறத்தாழ 18-ஆம் நூற்றுண்டுவரையில் தமிழகத்தில் இசைத் தமிழ் நூல்களே மிக்கிருந்தன என்று கூறுதல் பொருத்தமாகும். தமிழ்ப் பிள்ளைகள் தம்குழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாக்களையும் ஊஞ்சல் பாக்களையும் கேட்டனர்; விளையாடும் பருவத்தில் பந்து விளையாட்டுப் பாடல் (கந்துகவரி), அம்மானை, பொற்சுண்ணம், சாழல், தெள்ளேணம், உந்தி பறத்தல் தோள்நோக்கம் முதலிய ஆடல்களுக் குரிய பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர்; இப்பாடல் வகைகளைத் திருவாசகத்தில் காணலாம்; மணத்தில் மங்கல வாழ்த்துப் பாடலைக் கேட்டனர். உலக்கை கொண்டு குற்றும் தொழிலுக்குரிய பாட்டு வள்ளைப் பாட்டு எனப்பெயர் பெற்றது. ஏற்றம் கொண்டு நீரிறைப்பவர் பாடிய அனைத்திற்கும் பாடல்கள் இருந்தன என்பது தெரிகின்றன. தமிழன் இறந்த பின்பும் பாட்டு அவனை விடவில்லை. பலவகைச் சந்தங்களில் ஒப்பாரிப்பாக்கள் இன்றும் இருத்தலைக் காணலாம். இங்ஙனம் பழந்தமிழர் தம்பிறப்பு முதல் இறப்புவரை இசையிலேயே வாழ்ந்து வந்தனர் என்று கூறுதல் முற்றிலும் பொருத்தமாகும்.

சங்க காலம்

தமிழ்ப் பண்கள் ஏழு: அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயர் பெற்றன. இவற்றில் இருந்து பிறப்பவை திறங்கள் எனப்பட்டன. இவ்வாறு பிறக்கும் பண்களும் திறங் களும் பலகிளைகளாக இயங்கியவாறு எண்ணிறந்த இசைவகைகள் கண்டறியப்பட்டிருந்தன. பண்கள் பலவகைப்படும். அவற்றில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனப்பெரும் பண்கள் ஐந்து, இவற்றின் வகைப்பட்ட பண்கள் பல. அவற்றுள் பகற்பண்கள், இராப்பண்கள், காலைமாலைப்பண்கள் என அவ்வப்பொழுதிற்கு அமைந்த பண்களும் வழக்கிலிருந்தன.

பழைய மனிதன் உணர்ச்சிப் பெருக்கால் பாடி னன். கொண்டர், சவரர் முதலிய அநாகரிக மக்க ளிடம் பாட்டு முதன்மை பெற்றிருப்பதை இன்றும் காணலாம். எனவே, மனித உள்ளத்திற்குப் பாட்டு அமுதமாகப் பயன்பட்டு வருகிறது என்பது தெளிவு. இந்த உண்மையை உணர்ந்து குறிஞ்சி முதலிய நிலங்களுக்குரிய கருப்பொருள்களைக் கூற வந்த தொல்காப்பியர் முதலிய தொல் ஆசிரியர்கள் இசைக்கருவிகளையும் பண்களையும் சேர்த்துக் கூறினர். தொல்காப்பியம் அகத்திணையியலில் இவைபற்றிய விவரங்களைக் காணலாம்.

குறிஞ்சி நில மக்கள் இறை வழிபாட்டில் இனிமையாகப் பாடிக்கொண்டு குரவையாடினர். அது குன்றக் குரவை எனப்பட்டது. கொற்றவையை வழிபடப் பாலைநில மக்கள் பாலையாழையும் பிற கருவிகளையும் பயன்படுத்தி வேட்டுவ வரி பாடினர். முல்லைநில ஆய்ச்சியர் தாம்பாடிய ஆய்ச்சியர் குரவை யில் முல்லை நிலத்திற்குரிய கருவிகளையும் பண்களை யும் பயன்படுத்தினர்; மருதயாழும் மருதப்பண்ணும் மருதநிலத்திற்குரியவை; நெய்தல் யாழும் நெய்தற் பண்ணும் நெய்தல் நிலத்திற்கு உரியவை.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் அவற்றின் இனங் களும் இசையை அடிப்படையாகக் கொண்டவை. பரிந்து வரும் இசையில் பாடப்படுவது பரிபாடல். பண் – இராகம்; பாண் – பாட்டு. பாணர்-பாடகர். பாடினியர் – பெண்பாடகர். பாணரும்பாடினியரும் இசைத் தமிழ்ப் புலவராவர். இவருள் சீறியாழ், பேரி யாழ் என்னும் யாழ் வகைகளை இசைத்துப் பாடு வோரும் இருந்தனர். அவர்கள் முறையே சிறு பாணர் என்றும் பெரும்பாணர் என்றும் பெயர் பெற்றனர். அவர்கள் தம் கருவிகளை இசைத்துக் கொண்டே வள்ளல்களின் புகழைப்பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்தனர். பரிசில் பெற்ற பாணர்கள் வறியபாணர்களை வள்ளல்கள்பால் ஆற்றுப்படுத்தும் அறநெறியை மேற்கொண்டிருந்தனர்.

நடனத்திற்கும் நாடகத்திற்கும் இசை இன்றி யமையாதது ஆதலால் சங்க காலத்தில் இசை யாசிரியர் பலர் இருந்தனர். மாதவி ஆடிய நடன அரங்கில் இசையாசிரியர் இருந்தார். பலவகை இசைக் கருவிகளை இசைப்பவரும் இருந்தனர் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. பெண்கள் உலக்கை கொண்டு குற்றும் பொழுதும், பந்து ஆடும் பொழுதும், ஊசல் ஆடும் பொழுதும் பாடிக் கொண்டே இருந்தனர் என்பதைச் சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையால் அறியலாம். கடற்கரையோர மாக இருந்து இன்பமாகப் பாடும் பாடல்வரிப்பாடல் எனப்பட்டது. அது கானல் வரி எனவும் பெயர் பெற்றது. கானல் வரிப் பாடல்களைச் சிலப்பதி காரத்தில் படித்து இன்புறலாம்.

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அது [போர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த எல்லாம் நின் [கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி [காவேரி'

– சிலப்பதிகாரம் – கானல்வரி

★○★

சந்தாதார்க்கும், கழகத் தோழர் கட்கும் எமது நன்றிகலந்த பொங்கல் வாழ்த்து!

"குயில்"
"விடுதலை"
"பேரவை"

விற்பனையாளர் :-
இரா. தர்மலிங்கம்,
ராணி உணவு விடுதி : : தஞ்சை.

ஜெயராம் காப்பி ஒர்க்ஸ்

பொதுமக்களுக்கு எமது நன்றி கலந்த பொங்கல் வாழ்த்து

மணம், குணம் நிறைந்த உயர்ந்த காப்பித்தூளுக்குச் சிறந்த இடம்.

உரிமையாளர்,
எஸ். வெங்கடாசலம்
பெரியகடைத்தெரு,
குடந்தை.

குடல் கோளாறுகளான பித்தவாய்வு நோய்களுக்கும், ஜீரணசக்திப் பெருக்கத்திற்கும்

வில்வாதி லேகியம்
[40 ஆண்டு ஆராய்ச்சி]
டப்பி 1 க்கு விலை ரு 3–0–0

என். சதாசிவம்
வைத்தியர்
அனுமார்கோயில் தெரு,
கும்பகோணம்.

நமக்கு இன்று வேண்டுவது என்ன? திராவிடமா? (அல்லது) தமிழகமா?

புலவர், கோ. இமயவரம்பன்.

தமிழகம், ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழி பேசும் பிரதேசங்களும் சென்னைமாகாணம் என்ற ஒரே அமைப்பின் கீழ் இருந்தபோது நாம் திராவிடநாடுகேட்டோம், இந்த நான்கு மொழிகளும் பேசப்படும் மக்கள் இனத்தால் திராவிடராகி இருப்பதாலும் அன்று ஒரே மாநில மக்களாகி இருந்தமையாலும் வடவர்களால் இவர்கள் வஞ்சிக்கப்பட்டு வந்தமையாலும் வடவர் பிடியினின்று விடுபட்டுத் தனி திராவிடநாடு அடைய வேண்டும் என்று கூறுகிறோம்.

4—8—40ல் திருவாரூரில் பெரியார் அவர்கள் தலைமையில் நடந்த தென்னிந்தியா நல உரிமைச் சங்க 15-வது மாகாண மாநாட்டில் திராவிடர்களுடைய கலை; நாகரீகம்; பொருளாதாரம் ஆகியவைகள் முன்னேற்றம்அடைவதற்கு, பாதுகாப்பிற்கு திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம் இந்திய மந்திரியின் நேர்ப் பார்வையின் கீழ் (அன்றைய ஆங்கில ஆட்சியில்) ஓர் தனி நாடாகப் பிரிக்கப்படவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

அதற்குவேண்டிய திட்டங்கள்வகுக்கப்பெரியார் ஈ. வெ. ராமசாமி தோழர்கள் முனி. கன்னையா நாயுடு, பி. ராமச்சந்திர ரெட்டி; குமாரராஜா, முத்தையா செட்டியார் M. L. A., ராவ்பகதூர் N. R. சாமியப்பமுதலியார் M.L.C., நாராயணசாமி நாயடு M. L. C., ராவ்பகதூர் அப்பாதுரைப்பிள்ளை சர், பி, டி. ராஜன், ராவ்பகதூர் துரைசாமிமுதலியார் திவான் பகதூர் மகாபல ஹெக்டே, பி. பாலசுப்பிரமணியமுதலியார் சி. ப. சு. தேவ், கி. ஆ. பெ. விசுவநாதம்; ஊ. பு. அ. சவுந்திரபாண்டியன் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமனம் செய்வதென்று இம் மாநாடு தீர்மானிக்கின்றது, என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டு எங்ஙனம் பிரச்சாரம் செய்யப்பட்டது, அப்பிரச்சாரம் தமிழகமக்கள் மத்தியில்மட்டும் விழிப்புணர்ச்சியை ஊட்டியதே தவிர ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய பிரதேச மக்களைக் கவரமுடியவில்லை. அப் பிரதேசங்களில் இக் கொள்கையினைத் தெளிவாக எடுத்துச் சொல்லத்தக்க அளவிற்கு ஏற்ற தலைவர்களோ பிரச்சாரர்களோ முன்வரவில்லை.

பிறகு மொழிவழி மாகாணங்களாகப் பிரிந்து போகக் கிளர்ச்சிசெய்து தனித்தனியே பிரிந்துசெல்ல விரும்பினர்களே ஒழிய இந்த நான்கு மொழிபேசும் இனத்தால் ஒன்றுபட்ட திராவிடர்கள் வடவர்பிடியினின்று விடுபடவேண்டும் என்ற திட்டத்தை அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அதோடு இந்திய கூட்டாட்சியில் இணைந்து இருக்க ஒத்துக்கொண்டு வாழ்கின்றனர்.

இத்தகையநிலை ஏற்பட்ட பிறகும் நாம் அவர்களுக்கும் சேர்த்துத் திராவிடநாடு கேட்பது எப்படி அறிவுடைமையாகும்? நாம் முன்பு கூறிவந்ததாயிற்றே அதைஎப்படி நாம் மாற்றிக்கொள்வது என்று வீண்ஜம்பம் அடிக்காமல் நடுநிலையில் இருந்து சிந்தித்துப்பார்க்கவேண்டும். ஆந்திரரோ? மலையாளிகளோ? கன்னடரோ? நம் கொள்கையினை ஏற்றுக் கொள்ளாதபோது நாம் நம்மையாவது வடவர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரத்தனித்தமிழ் நாடு அடையவேண்டும் என்று பாடுபடுவது எங்ஙனம் குற்றமாகும்.

திராவிடர் கழகத்தினின்று பிரிந்து சென்ற கண்ணீர்த்துளிகள் வழக்கம்போலவே திராவிடர் கழகத்திட்டங்களுக்கு எதிராகக் குறுக்குச்சால் ஓட்டுவதுபோலவே இதிலும் குதர்க்கம் பேசிவருகின்றனர். பெரியார் தாம் பெற்ற திராவிடநாடு என்ற கொள்கையினைக் கைவிட்டு விட்டார். இது தந்தை தான்பெற்ற குழந்தையைக் கொல்வது போலாகும்'' என்று பொறுப்பற்ற முறையில் பேசித்திரிகின்றனர்.

தந்தை பெரியார் அவர்கள் 27—10—58-ல் மாதிரி மங்கலத்தில் இதுபற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்கு ''ஆமாம், நான் நான்குபிள்ளைகள் பெற்றேன் அதில் மூன்று செத்துப் புதைக்கப்பட்டுவிட்டது. மீதி ஒரு பிள்ளை இருக்கிறது அதற்காக நான் பாடுபடுகிறேன், இதைவிடுத்து எப்படிக் குழியில் புதைக்கப்பட்ட மூன்று குழந்தைகளையும் தோண்டி எடுத்துப் போட்டுக்கொண்டு அழமுடியும்'' என்று ஆணித்தரமான பதில் கூறினர்கள்.

நாம் வரலாற்றுப்படி பார்த்தாலும் மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் நம் இனத்தை வகுக்கின்றோம். தமிழ், கன்னடம், மலையாளம் தெலுங்கு, துளு, குடகு என்ற இந்த ஆறு பண்பட்ட மொழிகளும் திராவிட குடும்பத்தைச்சார்ந்த மொழிகள். இவற்றைப் பேசும் மக்களை நாம் திராவிடர் என்கின்றோம்.

இந்த ஆறுமொழிகள்மட்டும் அல்லாமல் துதம், கோதம், கோண்டு, கந்தம்அல்லது கு, ஒராவொன், இராஜ்மகால், போன்ற திருந்தாத திராவிடமொழிகளும் உள்ளன. இம்மொழிகளைப் பேசுவோர்களும் திராவிட இன மக்களேயாவர்.

தூதமும்–கோதமும்:- நீலகிரிமலைப் பிரதேசத்தில் வாழும் பூர்வீககுடிகளால் பேசப்படுவதாகும். துதம் பேசுபவர்கள் தொகை 700. கோதம் பேசுபவர்கள் தொகை 1200.

கோண்டு :– இம்மொழிபேசுவர்கள் கோண்டர்கள், இவர்கள் மத்திய இந்தியாவில் குன்றுகளிலும் காடுகளிலும் வாழும் பழங்குடி மக்கள் ஆவார்கள். அவர்கள் எண்ணிக்கை 1,50,000 ஆகும்.

கந்தம் அல்லது கு :- இம்மொழி பேசும் பூர்வீக குடிகளான திராவிடர்கள் மத்திய இந்தியகாடுகளில் ஒரிசாவின் குன்றுகளிலும் வாழ்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை 1911-ம் ஆண்டு க்ணக்குப்படி 5,30,000 ஆகும்.

ராஜ்மகால்:- ராஜ்மகாலர் என்று அழைக்கப்படும் பழங்குடி மக்கள் வங்காளத்திலுள்ள இராஜ்மகால் மலைகளில் பண்டைக் காலத்திலிருந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தொகை 64000.

ஒராவொன்:- இம்மொழி பேசும் மக்கள் சோட்டா நாகபுரியைச்சுற்றி வாழ்கின்றர். இவர்கள் எண்ணிக்கை 8,00,000.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வகுத்த டாக்டர்கால்ட்வெலகருத்துப்படி வங்காளப்பழங்குடி மக்களில் பெரும்பகுதியினர் திராவிடர் குழுவைச் சேர்ந்தவர்களே. வங்காளக் கோட்டங்களிலும், சோட்டா, நாகபுரி, ஒரிசா முதலிய பகுதிகளிலும் அவற்றை அடுத்த காடுகளிலும் வாழும் பூயியர்கள் கொச்சர்கள் (The Kocch) ஆகிய இனத்தார்களும் திராவிடர் களேயாவர். இவர்கள் எண்ணிக்கை முறையே 25,00,000; 15,00,000.

திரு, கால்டு வெல் அவர்கள் தம் ஒப்பிலக் கணத்தில் கீழ்க்கண்டவாறு திராவிட மொழிகளையும், அவைபேசும் மக்கள் எண்ணிக்கையும் குறித்து எழுதியுள்ளார்.

“கொள்கை வேற்றுமைக்கு இடமுள்ள இத்தகைய பகுதிகளை நீக்கி, ஐயத்திற்கே இடமின்றித் திராவிடர் என ஏற்றுக்கொள்ளத்தக்க வகுப்புகளும், அவற்றின் தொகைகளும்.

1911-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்குப்படி கீழேதரப்படுகின்றன (இதுவும் அவர் வாக்கியமே)

திராவிட மொழிகள்			பேசுவோர் தொகை
1.	தமிழ்	... ...	191 89 740
2.	தெலுங்கு	... ...	2 35 42 859
3.	கன்னடம்	... ...	1 05 25 739
4.	மலையாளம்	... ...	67 92 277
5.	துளு	... ...	5 31 498
6.	குடகு	... ...	42 881
7.	துடம்	... ...	730
8,	கோதம்	... ...	1280
9.	கோண்டு	... ...	15 27 157
10,	கந்தம் (கு)	... ...	5 30 476
11.	இராஜ்மகால்	... ...	64 825
12.	ஒராவோன்	... ...	8 00 328
	மொத்தம் திராவிடர்	...	6, 35, 49, 840

(கால்டுவெல் ஒப்பிலக்கணம் தமிழ் மொழி பெயர்ப்பு 55–ம் பக்கம்)

இப்பொழுது கண்ணீர்த்துளிகள் என்னசொல்கின்றனர்? “எங்கள்கொள்கை எல்லாம் மொழிவழி பிரிந்து இன வழி ஒன்றுபடுவதேயாகும் அதற்காகவே எங்கள் கழகம் பாடுபட்டுவருகின்றது” என்கின்றுர்கள். இவர்கள் எண்ணிக்கொண்டு இருப்பதெல்லாம் திராவிடர்கள் என்றுல் பழைய சென்னை மாகாண அமைப்பில் இருந்த தமிழ் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிபேசும் மக்களை மட்டும்தானுகும்.

ஆனுல் பாவம் ஏனைய மொழிகளும் பேசுபவர்கள் எல்லாம் திராவிடர்கள்தான் என்ற உண்மையினை ஏனோ மறந்துவிட்டனர். ஏறத்தாழ6கோடியே 40 லட்சம் மக்கள்கொண்ட திராவிட இனமக்களில் ஏறத்தாழ 36 லட்சம் மக்களை ஏனோ மறந்து விட்டனர். ஆகவே நாம் இன வழி நாடுகேட்க வேண்டுமேயானுல் வங்காளம், ஒரிசா, ராஜ்மகால்

இருப்த்தைந்தாம் பக்கம் பார்க்க.

முப்பெருஞ் செல்வங்கள்

A. P. சனார்த்தனம், M. A.

செல்வாக்கில்லாத கழகம், எரிப்பதை உடைப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள், புத்தியைத் தீட்டத் தெரியாத முட்டாள் கூட்டம், என்றெல்லாம் பதர்களால் பழிக்கப் பட்ட திராவிட கழகம் இன்று தமிழரின் உரிமைப் போர்த் தலையணியில் நிற்கிறது. சாதி ஒழிப்புப்போரில் இதுவரை பன்னிரண்டு செல் வங்களைப் பலி கொடுத்திருக்கிறது. அடுத்து நடக்க இருக்கும் பட எரிப்புப் போருக்கு ஏராளமான தமிழர்கள் தோள் தட்டிப் புறப் படத் தயாராக இருக்கிறார்கள். பெரியாரின் ஆணையை எதிர்நோக்கியுள்ள காளைகள் ஆயிரம் ஆயிரம். மாற்றாரும், துரோகிகளும்கூட பெரி யாரின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்த வண்ணமிருக்கின்றனர். தென்னாட்டு எதிர்கால வாழ்வை உருவாக்கும் பொறுப்பு திராவிட கழகத்துக்கே உண்டு.

திராவிட கழகத்தின் முப்பெருஞ்செல்வங் களைக் குறித்து நாம் பூரித்த வண்ணமிருக் கிறோம். மற்ற இயக்கங்களில் இல்லாத அந்தச் செல்வங்கள் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தி தோள் தட்டி ஆடவைக்கின்றன.

தந்தைபெரியாரின் தலைமை முதற்செல்வம். புரட்சிக் கவிஞர் கூறுகிறபடி பெரியார் உயர் எண்ணங்கள் மலரும்சோலை! ஆயிரம் ஆண்டுக் கொருமுறை தோன்றும் தலைவர்! ஆரிய இருட் காட்டை அழிக்க வந்த பகுத்தறிவுப் பகலவன்! சுயமரியாதைக் காடு மணக்கும் கற்பூரப் பெட்டகம்! புத்தர்களையும், சித்தர்களையும் சீரழித்த ஆரியத்தின் இணையற்ற வைரி! பன் னூற்றாண்டுகளாகத் தூங்கிக்கிடந்த தமிழரைத் தட்டி எழுப்பிய மாபெருந் தலைவர்! பெரியார் தொண்டாற்றப் புகுமுன் இருந்த தமிழகம் கரடுமுரடான பாலை! சாதிப்படையும் வைதிகத் தொழுநோயும் தமிழரை வாட்டி இருந்த நாட் கள்! உச்சிக் குடுமியும், பூணூலும், மடி சஞ்சி யும் ஆர்ப்பாட்டம் செய்த நாட்கள்! குழவிக் கற்களெல்லாம் தெய்வங்கள்! தமிழ் மூலையில் தள்ளப்பட்டிருந்தது! தமிழன் என்ற எண்ணம் சிறிதுமில்லாமல் நம்மவர்கள் ஆமைகளாய். ஊமைகளாய் இருந்த நாட்கள்! அடுப்பங்கரை களெல்லாம் ஆரியக் கோட்டைகளாகக் காட்சி யளித்த காலம்! அறுபதுதாண்டிய பெரியவரை ஆறு தண்டாத அம்பிப்பயல் 'ஏண்டா முனுசாமி!'' என்று கூப்பிட்ட காலம்! பெருங் குடி மக்கள் சமுதாயத்தின் அடித்தட்டிலே! பழங்குடிமக்கள் ஊருக்கு ஒதுக்குப்புறத்திலே! நண்டும் நரியும் தான் அவர்களது தோழர்கள்! தலைவிதித் தத்துவத்துக்கு அடிமைப்பட்டு எல்லாம் 'அவன் செயல்' என்ற சாக்குருவி வேதாந்தம் ஆதிக்கம் செலுத்திய நாட்கள்!

இத்தனையும் மாறி, மறுமலர்ச்சி ஏற்பட் டுள்ளதென்றால், அது பெரியார் ஒருவரால்தான் என்பதை நன்றி கெட்டவர்களைத் தவிர மற்ற யாரும் மறுக்க முடியாது. பெரியார் தோன்றி யிராவிட்டால் திருவாளர் கக்கன் தெருவில் செருப்புடன் நடமாடியிருக்க முடியாது! பெரியார் தோன்றியிராவிட்டால் திருவாளர் காமராசர் மரம் ஏறும் திருக்கூட்டத்திலிருந் திருக்க வேண்டும்!! பெரியார் தோன்றியிரா விட்டால் அறிஞர்களும், கலைஞர்களும்சமுதாய சாக்கடையில் புழுக்களாக நெளிந்து கொண்டிருக்க வேண்டும்!!! எதற்கும் அஞ்சா மல், யார் தயவுக்கும் காத்திராமல், தடைக் கற்களைத் தூள் தூளாக்கி, பழமைப் பாம்புகளைக் கொன்று, மூட நம்பிக்கைப் புதர்களை அழித்து, சனாதனக் கோட்டைகளின்மீது அறிவுக்குண்டு களை வீசி, எண்பது கண்டும் எள்ளத்தனையும் சளைக்காமல் உழைக்கும் அந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இராவணனை, இரணியனை நாம் பெற்றிருக்கிறோம். வருங் காலத் தமிழர்கள் நம்மைக் கண்டு நிச்சயம்

பொறுமைப்படுவர்! அவர் காலத்தில் வாழ்கிறோம். அவரது படையில் இருக்கிறோம் என்ற பெருமை நமக்கு!

நாலு மேடையேறியதும் தலை துள்ளிப் போகும் தறுதலைகளும், இரண்டு எழுத்தைக் கிறுக்கினதும் இறுமாந்து திரியும் இழிந்ததுகளும் மலிந்த இந் நாட்டில் செல்வம் பெருகியிருந்தும் எளிமைக் கோலத்துடன், நாடு பூராவும் சுற்றிச் சுற்றி அறிவுக் கருத்துக்களை அள்ளித்தரும் அந்தஈரோட்டு வள்ளல் நமக்குக் கிடைத்தற்கரிய செல்வமல்லவா?

தலைவரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு, எத்தகையை காட்டாற்று வெள்ளத்தையும் கடக்கவல்ல சிறந்த தொண்டர்கள் திராவிட கழகத்தின் இரண்டாவது பெருஞ் செல்வம்! மூன்றாண்டு தண்டனை கிடைக்கும் என்று தெரிந்தும், வெஞ்சிறையில் அணு அணுவாகத் தேயவேண்டிவரும் என்று தெரிந்தும், ஆசை மனைவி, அன்பைக் கொட்டி வளர்க்கும் பிள்ளைகள், வயதுசென்றபெற்றோர், இவர்களை யெல்லாம் பிரிந்திருக்கவேண்டும் என்று தெரிந்தும், தான் சிறைசென்றால் குடும்பம் கஞ்சிக்கே தத்தளிக்கவேண்டியிருக்கும் என்று தெரிந்தும், சாதி ஒழிப்புப் போரில் கலங்காமல் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான தொண்டர்களை வேறு எந்த முகாமிலும் காணமுடியாது. ஐந்து ஏக்கரோ, விளம்பரமோ, பர்மிட்டோ, பதவியோ, வாழ்வோ, இவர்களுக்குக் கிடைக்காது. அவற்றை இவர்கள் எதிர்பார்க்கவுமில்லை. சாதி ஒழிப்புப் போரில் இதுவரை பன்னிரண்டு செல்வங்களை நாம் பலி கொடுத்திருக்கிறோம். இன்னமும் எத்தனை பேரோ! காலம்தான் பதில்சொல்லும். தேய்ந்தவர்களாய், எலும்புக் கூடுகளாய், நோய் முற்றியவர்களாய் இன்னமும் பலர் உலவிக்கொண்டுள்ளனர்.

சில்லரைகளின் சீற்றத்தை; மேனாமினுக்கிகளின் ஏளனப் பேச்சுக்களை, சுற்றத்தாரின் ஏச்சுக்களை அலட்சியம் செய்துவிட்டு அடுத்த போருக்குத் தம்மைத் தயார்செய்துகொண்டு இந்தத் தியாகமணிகள் புதிய புறநானூற்றை உருவாக்குகிறார்கள். அலங்கார பொம்மைகளை அட்டை உருவங்களைக் காட்டி, "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று கேட்கும் எத்தர்களைத் தலைகுனியச் செய்யும் படைதான் நம் கருஞ்சட்டைப் படை!! குலைக்கும் குக்கல்களல்ல, தலைவரின் ஏவலின்பேரில் கடிநாய்களாகும் பண்பினர்! தோற்றுவிட்டு, மூக்கொடிந்தும் வெற்றிவிழாக் கொண்டாடும் காமாளிகளல்ல! தோல்வியையே கண்டறியாத வெற்றி வீரர்கள்! பகட்டில் மயங்கும் வெட்டுக்கிளிகளல்ல! கடைசி மூச்சுள்ளவரை அக்கிரமத்தை, அநியாயத்தை தொகையாக எதிர்நிறுத்தி தூள் தூளாக்கும் ஆற்றல் மறவர்கள்! பம்பரமெனச் சுழன்று பணியாற்றும் செம்மல்கள்! வர்ணாச்சிரம அரண்களைத் தகர்த்தெறியும் டாங்கிப்படை! யாருக்கும் தலை வணங்காத அழகிரி பரம்பரையினர்! இன்னமும் பலர் சிறையில் வாடுகின்றனர்! அதை எண்ணும்போது நமக்கு இது ஆத்திரப் பொங்கலாகவே மாறுகிறது! இத்தகைய தொண்டர்கள் தான் நம் கழகத்தின் இரண்டாவது பெருஞ் செல்வம்.

இன விடுதலை; நாட்டு விடுதலை, இவை இரண்டும் குறிக்கோளாகக் கொண்ட உயர்ந்த லட்சியம் நமது மூன்றாவது பெருஞ் செல்வம்! உளுத்த கொள்கைகளுக்கு, தெளிவற்றதிட்டங்களுக்கு, கட்சிகள் பல உள்ளன! ஆனால் நம் கழகத்தின் இலட்சியம் உயர்ந்தது! மிகத் தெளிவானது!! உலகிலேயே மிகக் கொடிய நிறத் திமிரை வர்ணாச்சிரமம் என்னும் பயங்கரமான பிறவி முதலாளித்துவத்தை நாம்தான் எதிர்க்கிறோம். நாட்டை மட்டுமின்றி, அறிவை, மானத்தை அடிமைப்படுத்தும் அக்கிரமத்தை நாம் வேறு எங்கும் காணமுடியாது.

பர்மிட்டுக்கு ஒரு கட்சி. பகட்டுக்கு ஒரு கட்சி. காட்டுமிராண்டித் தனத்துக்கு ஒருகட்சி பலாத்காரத்துக்கு ஒரு கட்சி! இப்படிப் பல கட்சிகள் உண்டு! ஆனால் தமிழரின் விடுதலைக்குப் பாடுபடும் ஒரேகட்சி திராவிட கழகம் தானே!

ஆரியத்தை முன்னேறித் தாக்குவோம் என்று முரசுகொட்டி, முன்னேற்ற லேபிலை ஒட்டிக்கொண்டு முடிவில் ஆரிய ராமனின் வலையில்சிக்கி, நுனிஏறி அடிமரத்தை வெட்டும் அறிஞர்களைவிட தெளிவான இலட்சியத்துடன் வேலை திட்டத்துடன் நாம் செயலாற்றுகிறோம்.

எனவே, சிறந்த தலைவர், அருமையான தொண்டர்கள் தெளிவான இலட்சியம் ஆகிய இவை மூன்றும் திராவிட கழகத்தின் மூன்று சிறந்த செல்வங்கள்!!! இதைவிட வேறென்ன வேண்டும்!!

★ ★

கட்சித்தலைவரல்லர்
பெரியார்

நடிகவேள் M. R. இராதா.

"இன்றைக்கு ஏறக்குறைய 3500 ஆண்டுகட்கு முன்பு ஆண்ட தமிழர்கள் சாதி மதப் பாகுபாடுகளின்றி மொழியினடிப்படையில் ஒரே இனமாகவாழ்ந்து வந்தார்கள்.'' என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் – கூலிக்கு எழுதுபவர்களோ, தன்னலங்கருதி உண்மையை மறைத்துக் கூறும் ஆசிரியர்களோ அல்லர் – அதாவது ஆராய்ச்சித் திறனுடைய, நடுநிலைமை வழுவாத மேல் நாட்டு வரலாற்றுசிரியர்கள் தக்கஆதாரங்களுடன்விளக்கிக் கூறியிருக்கிறார்கள். இது தமிழர்களின் பண்டைக் கால நிலை. ஆனால் இன்றோ தமிழன் டஜன் கணக்கான மதங்கட்கும் நூற்றுக்கணக்கான சாதிகட்கும் குரோஸ் கணக்கான கட்சிகட்கும் இரையாகி ஒட்டிய வயிறும் ஒளியிழந்த முகமும் உடையவனாகக் காணப்படுகின்றான்.

ஒரு காலத்தில் கொடிகட்டி வாழ்ந்த தமிழர் இன்று குடிகெட்டுப் பிறர் பிடிக்குள் அகப்பட்டு அவர்களின் மடி நோக்கி வாழ வேண்டிய நிலைமை எய்தியதற்குக் காரணம் யார் என்று அறியாது நாம் தவித்துக் கலங்கிய நேரத்தில் நம்மைத் தட்டி எழுப்பி "தாழ்ந்து தாழ்ந்து தரையினும் தாழ்ந்து போன தமிழனே! இதோ உன் எதிரில் உச்சிக் குடுமியும் உருவிய பூணூலுமாகக் காட்சியளிக்கிறானே இந்த பூசுரனும் அவன்தன் கடைச் சரக்கான கற்பனைக் கடவுள்களும் முடை நாற்றம் வீசும் புராணக் குப்பைகளுமே உன் வீழ்ச்சிக்குக் காரணம்'' என்று நமக்கு எடுத்துக்கூறியவர் ஈரோடு ஈன்ற வெண்தாடி வேந்தர் பெரியார் இராமசாமி தான் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

இப்படி நம்மை ஆண்டாண்டு காலமாக அடுத்துக் கெடுத்து வந்த ஆரியர் பிடியினின்று தடுத்துக் காக்கப் பெரியார் கண்ட பெரும்படை வீடுதான் திராவிடர் கழகம் என்றாலும் என்னைப் பொருத்தவரையில் அவர் எந்த ஒரு கட்சிக்கும் சொந்தமான தலைவரல்லர் என்றுதான் நான், கருதுகிறேன். ஏனென்றால் அவர் கட்சிகளுக்கெல்லாம் இருதயம் போன்றவர். இல்லையெனில், அன்று சேலம் சிறையிலே பொதுவுடைமைத் தோழர்களை அரசினர் சுட்டுப் பொசுக்கியபோது "சுடாதே, நிறுத்து'' என்று அபாய அறிவிப்புச் செய்திருக்கவோ அன்றி நேற்று ஆச்சாரியார் காலத்தில் அண்ணாத்துரைக் கூட்டத்தினர் கல்லக்குடி போராட்டத்தில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானபோது கொதித்தெழுந்து கூட்டங்கூட்டி ராஜாஜியை எச்சரித்துத் தடுத்திருக்கவோ தேவையில்லை.

வலக் கரத்திற்கு வலி ஏற்பட்டால் இடக்கரம் உணர முடியாது. இடக்கரத்திற்கு வலி ஏற்பட்டால் வலக்கரமும் உணரமுடியாது. ஒரு காலில் ஏற்படும் காயத்திற்குப் பிறிதொரு கால் வருந்தாது. தலைவலியால் தோள் வாடாது, தோள் வலியால் தலையும் வாடாது. இதைப் போலவே பிறகட்சித் தலைவர்கள் மாற்றுக் கட்சிகளின் இன்னல்களை உணரமாட்டார்கள். உணர்ந்தாலும் உளம் மகிழ்வார்களே ஒழிய ஆதரவு காட்ட மாட்டார்கள். ஆனால் உடலின் எந்த ஒரு சிறு பகுதிக்கு ஊறு நேர்ந்தாலும் இருதயந்தான் அதன் வலியை உணரமுடியும். இதைப் போன்றே எந்த ஒரு கட்சித் தொண்டனுக்குக் கேடு வந்துற்றாலும் பெரியாரால்தான் உணர முடிகிறது. எனவேதான் எந்த ஒரு கட்சிக்கும் உரிய தலைவரல்லர் பெரியார் என்று நான் கருதுகிறேன். மேலும் பெரியாருக்குப் பிறகு நமக்குத் தலைவர் தேவையில்லை. வேறு தலைவரும் தோன்ற முடியாது. பெரியாருக்குப் பிறகு இந்த நாட்டில் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் மூன்று அல்லது நான்கு மணிநேரத் தலைவர்களைத் தான் தலைவர் என்று ஒத்துக் கொள்ள முடியுமே தவிர, நிரந்தரத் தலைவராக வேறு எவரையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்றுக் கொள்ளவும் கூடாது. பெரியாருக்குப் பிறகு திராவிடர் கழகத்திற்குத் தலைமை தாங்குவது யார் என்று சிலர் கேட்கலாம். அத்தகையோருக்கு ஒன்று கூற விரும்புகிறேன்: பெரியாருக்குப் பிறகு திராவிடர் கழகம் கலைக்கப்படவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் காந்தியாருக்குப் பிறகு காங்கிரஸ் அடைந்த நிலையைத் திராவிடர் கழகமும் அடைய நேரும். பெரியாரும் தன் வாழ்நாட்களுக்குள்ளேயே தமிழகத்தை நமக்காக்கிவிட்டுத் திராவிடர்கழகத்தையும் கலைத்து விட்டுத்தான் மறைவார். பெரியாருக்குப் பிறகு யாராவது திராவிடர் கழகத்துக்குத் தலைவராக வரலாமென்று எண்ணில் அவர்கள் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்க முடியாது. வெறும் குருட்டுச்சாமியாகத்தான் இருக்க முடியும்.

பெரியாருக்குப் பிறகு திராவிடர் கழகம் கலைக்கப்பட்டால் பகுத்தறிவும் சீர்திருத்தக் கொள்கைகளும் பரவ வழியில்லாது போகுமென்றோ தி. க. தொண்டர்களுக்கு வேலையில்லாது போகுமென்றோ யாரும் கருத வேண்டாம். அக்கொள்கைகள் இன்று போலவே என்றும் பரவ, தந்தை பெரியார் பெற்றெடுத்த பொற்சுரங்கமாம் சுயமரியாதைப் பிரச்சாரக் கழகம் நன்று பணியாற்றும்.

வாழ்க பெரியார்!

வெல்க தமிழகம்!

எழிலுடைப்பரத்தையின் ஏக்கழுத்தம்

தமிழ்ப்பேராசிரியர், சு. குமாரசாமி

மருத நிலத்துச் சிறந்த மூதூரின் கண்ணே, ஒரு செல்வத்தோன்றல் வாழ்ந்து வந்தான். அவன் தக்க மனைக்கிழத்தி வாய்க்கப் பெற்ருேன். அவனுக்குப் பல புதல்வர்கள் தோன்றினர். இல்லற வாழ்க்கையும் இனிது நடைபெற்று வந்தது.

ஒருகால், அவன் காமவயத்தனய் ஒரு பரத்தைபால் அன்பு பாராட்டி வந்தான். இதனைப் பலரும் அறிந்தனர். அவன் தலைவிக்கும் தெரிந்து விட்டது. அவள் மனக்கவலை கொண்டாள்; அதனல் ஒரு நாள் தன் தலைவனை நோக்கிக் கீழ்வருமாறு கூறினள்.

''பரத்தையர் என்பவர் எத்தகையர் என்பது உமக்குத் தெரியாதா? அவர்கட்குப் பொருட்பெண்டிர்'' என்றன்ருே நம் முன்னோர் பெயர் கொடுத்துள்ளார். அதனை ஆராய்ந்து பார்த் தால், அவர்கள் இளந்தோன்றல்கள்பால் உள்ள பொருளைக் கவர்வதிலேயே நோக்க முடையவர் என்பது புலனுகவில்லையா? மகளிர், தாம்பி (கயிறு) னிடத்தே குடத்தைப் பிணித்துக் கிணற்றில் உள்ள நீரைக் கொள்வது போலப் பரத்தையர் தம் அழகாகிய கயிற்றில் செல்வத் தோன்றல்களாகிய குடங்களைப் பிணித்து அவர்கள் மனையாகிய கிணற்றினிடத்தேயுள்ள பொருளாகிய நீரை முற்றும் (வறளும்படி) கவர்வதன்ருே அவரியல்பு. இதனை நீர் அறியீரோ? அறிந்தும் நீர் பரத்தைபால் விருப்பங் கொண்டு ஒழுகுதல் நன்றன்று'' என வருத்தத்தோடு கூறினள்.

தலைவன் ''ஈதென்ன வியப்பு அங்ஙனம் ஒழுகுவேனு? நீ அறியாது கூறுகின்ருய்'' என்ருன்.

உடனே தலைவி, ''நீர் மறைத்துக் கூறுகின்றீர்; இன்னபரத்தைபால் விருப்புடன் சென்று வருகின்றீர்; அவள் பெயர் அங்க அடையாளங்கள் இவை'' எனக் கூறியதோடமையாது ஊரவர் பலரும் கூறுவதையும் கூறிமெய்ப்பித்தாள்.

தலைவன் ''ஊரவர்க்கென்னவேலை? ஏதேனும் கூறிக் கொண்டிருப்பர். இவைகளைபெல்லாம் நம்புகிருயே'' என்று சொல்லிக் கொண்டே அவள் வருத்தம் மிகாதிருக்கும் பொருட்டு அப்புறம் போய் விட்டான்.

தலைவன் இல்லத்தே நிகழ்ந்த இந் நிகழ்ச்சி புறத்தார்க்குப் புலனயிற்று. அவன் பரத்தையின் செவியிலும் சென்று சேர்ந்தது.

தலைவி தலைவனைத் தன்னேடு சேர்த்துக் கூறிய மொழிகள் பரத்தையை வருத்தின. செய்வது யாது என்று அவட்குத் தோன்ற வில்லை. தலைவன் இல்லத்தே சென்று தலைவியினிடம் வாதிட முடியுமா? தலைவி எங்காவது காணப்படின் அவள் பால் சென்று அவளை வாதுக்கிழுப்பதோ கற்புடை மகளிர் தம்மில்லம் நீங்கிக் கண்டகண்ட இடங்களிற் காணப்படுவரோ? காணப்படாரன்ருே! என் செய்வாள்! காலம் பார்த்திருந்தாள்.

ஒருநாள் தலைவியின் பக்கத்தே உள்ளவரைக் கண்டாள்; அப்பொழுது அவர்கள் கேட்டுக் கொண்டு போய்த் தலைவியினிடம் சொல்லுமாறு தன் தோழியிடம் கூறுகின்ருள்:

முதலில் தலைவனுடைய நிலவளத்தைக் குறிக்கின்ருள். அது ''நெருப்புக் கப்புவிட்டாற் போன்ற தாமரை மலர்களையுடைய வயலிடத்தே நெல் முதலிய பொரிகள் வெடித்தாற்போலத் துள்ளியெழும் பலவாகிய சிறு மீன்களை உண்ணும் பொருட்டு வாசனையையுடைய பசிய இலையின் மேலே பறக்கமுடியாத சிச்சிலி (மீன் கொத்தி)ப் பறவை ஒய்ந்து மெல்ல மெல்ல வந்திருக்கும்'' என்பது.

''இத்தகைய வளப்பம் மிக்க நிலங்களையுடைய தலைவனை அவன் மனைவி நம்மோடு சேர்த்து வெறுத்துக் கூறுகின்ருள் என்று பலரும் கூறுகின்றனர். நாம் அப்படிப்பட்ட காரியம் செய்யாமலிருந்தாலும் அவள் நம்மைப் புறங்கூறலைக் கேட்க நம்மால் முடியவில்லை. ஆகையால், செழியன் போரை வெல்லுந்தோறும் தன் தண்ணுமை (மத்தளம்)யின் கண்ணிடத்து அடிக்கும் பாணன் போலத் தலைவி தன் வயிற்றிடத்து அடித்துக் கொள்ளும் பொருட்டு வளையல் ஒலிப்ப வீசி அவளுறையும் சேரியின் கண்ணே சிறிதுபொழுது சுற்றி வருவோம் வா'' என்று கூறினள்.

இதனைக் கீழ்வரும் பாடலால் அறிக,

''எரியகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
பொரியகைந் தன்ன பொங்குபல சிறுமீன்
வெறிகொள் பாசடை உணீஇயர் பைப்பயப்
பறைதபு முதுசிரல் அசைபுவந் திருக்கும்
துறைகே ழூரன் பெண்டுதன் கொழுநனை
நம்மொடு புலக்கும் என்ப நாமது
செய்யா மாயினும் உய்யா மையில்

தொடர் இருபத்தாரும்பக்கம்.

அவள்

"சித்தன்"

பிரிவு; தென்றல்

முற்றிய பிரிவுத் துன்பம்
 மொய்த்திட அவள்கி டந்தாள்
வற்றிய குளத்தைப் போல
 வனப்பொரு சிறிது மின்றி!
சுற்றிலும் பொதிகைத் தென்றல்
 சூழ்ந்ததால்! அவளோ தியால்
பற்றிய வீட்டிற் குள்ளே
 பாவைபோல் இருக்க லானாள்!

மாலை; பறவையொலி

வேலினைத் தூக்கி இன்னல்
 விளைத்திட வந்தோன் போல
மாலையும் வந்தன் னாளை
 வதைத்ததே! இல்லம் சூழ்ந்த
சோலையில் புட்கள் தத்தம்
 துணையொடு ஒலித்த யாவும்
ஆலையின் முழக்க மாகி
 அவள்செவிப் புகுந்த தன்றே!

முல்லை

முத்துக்கள் போலும் மாதர்
 முறுவலைப் போலும் எங்கும்
கொத்துக்கொத் தாய்ம லர்ந்த
 கொடிமுல்லை மணந்தான் யார்க்கும்
பித்தினை ஏற்றும், ஆனால்
 பேதையாம் அவளை அஃது
மத்திடைத் தயிர்போ லன்றோ
 வாட்டியே வதைத்த தம்மா!

குழலிசை

"மழலையோ, யாழோ, செஞ்சொல்
 வாணரின் கவிதை யோஇக்
குழலிசை" என்று யாரும்
 கூறுமின் னிசைதான் அந்த
அழகியின் காதில், சட்ட
 அரங்கினில் எதிர்க்கும் நல்லார்
முழக்கமும் பயனில் லாமல்
 முடிவது போலா யிற்றே!

பால்

பாலினை "உண்க" என்றே
 பரிவுடன் அவள்முன் இட்டார்
சேலினை நிகர்த்த கண்ணார்;
 திருவுடைத் தமிழர், நல்ல
நூலிலா இந்தி யிங்கு
 நுழைவதை வெறுத்தல் போல், அப்
பாலினை வெறுத்தாள்! உள்ளம்
 பதறியே "தொடேனஃ" தென்றாள்!

மணியொலி

அந்திவான் சிவப்பா யிற்றே
 அவளிணை விழிபோல்! மாட்டு
மந்தைதான் புழுதி தூற்றி
 மணியொலி கொஞ்ச மாற்றார்
விந்தைசேர் அரணைத் தாக்கி
 வீரர்கள் திரும்பு தல்போல்
வந்ததால் "அவர்தே ருற்ற
 மணியொலி தானோ?" என்றாள்!

மயக்கம்

அலைகடல் பரப்பில் சூறை
 அடித்திடும் போதில், கப்பல்
நிலைகுலைந் தாடல் போல், அந்
 நிலாமுகப் பெண்ணாள் உள்ளம்
தலைதடு மாறி, வீழ்ந்தாள்
 தரையினில் அம்பே றுண்டு
கலைமயில் வீழ்தல் போல், அக்
 கணத்தினில் முகில்கி ழித்து.

வியப்பு

மின்னல்தான் நடைபெற் றால்போல்
 விரைந்தொரு தோழி வந்து,
"கன்னலின் மொழியே! உன்றன்
 காதலன் வருந்தேர் கண்டேன்"
என்றனள்; தலைவி கேட்டே
 இயம்புமைந் தாண்டுத் திட்டம்
தன்னிலும் பயனைக் கண்ட
 தமிழர்போல் வியப்புற் றாளே!

உவகை

மைக்கண்ணாள் துணைவன் ஆங்கே
 வந்தனன்; அவளுங் கண்டாள்!
கைக்குத்தல் அரிசி, வெல்லம்,
 கனிகள், நெய், கரும்பு, யாவும்
தைக்குத்தை பாலில் இட்டே
 தனிமணத் தோடு தாய்மார்
வைக்கின்ற பொங்கல் பொங்கி
 வழிதல்போல் உவகை கொண்டாள்!

இன்பம்

தையினில், சிறுவர் நாளும்
 தாய்தருஞ் சுவைக்க ரும்பைக்
கையினிற் கொண்டும், தின்றும்
 காணுநல் லின்பை, அன்பன்
செய்யவா யிதழில் அந்தச்
 சேயிழை பெற்றாள்! மெய்யால்
எய்தினாள் தமிழின் பத்தை
 என்றிடில் தவறு முண்டோ?

★

நமக்கு இன்றுவேண்டுவது...?

பிரதேசங்கள் அசாம் பிரதேசங்கள் சோட்டா நாகபுரி பிரதேசங்கள் ஆகியவற்றை யல்லவா சேர்த்துக் கேட்கவேண்டும்.

ஆகவே இன்றைய நிலையில் திராவிடர்கள் இனவழி ஒன்றுபட்டு நாடடைவது என்பது சாத்தியக் கூறுகள்உடையதல்ல என்பது புலனு கிறதல்லவா? எனவே மொழிவழி பிரிந்த தமிழகம் இந்திய அரசியலில் இருந்து விடுபட்டுச் சுதந்திரத் தமிழ்நாடாக அமையவேண்டும் என்று பாடு படுவதே விவேகமுடையதாகும்.

இதனை விடுத்துக் கேலியும் கிண்டலும் செய்வ தென்பது எவ்வளவு பொறுப்பற்ற பைத்தியக்காரத் தனம் என்பதை பொதுமக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கன்னடம், மலையாளம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளைப் பேசும் இனத்தால் ஒன்றுபட்ட திராவிட மக்கள் ஆனபோதிலும் ஆங்கிலேயர் ஆட்சியைத்தவிர எந்தக்காலத்தில் ஒன்ருக வாழ்ந்து இருக்கின்றனர்? அப்படி வாழ்ந்ததாக வரலாறுதான் உண்டா?

கி. மு. மூன்றும் நூற்ருண்டிலேயே அதாவது அசோகன் காலத்திலும் ஆந்திரமும் தமிழகமும் வேறு வேறு ஆட்சியில் தான் இருந்து வந்து இருக் கின்றது. கி. பி. 350ல் சமுத்ரகுப்தன் தென்னுட் டின் மீது படைஎடுத்து வந்த காலத்திலும் ஆந்திரம் தனித்துத்தான் இருந்திருக்கின்றது. கி. பி. 7-ம் நூற்ருண்டில் குமரிலபட்டன் காலத்திலும் தமிழகம் வேறு சுதந்திரம் வேறு என்று இருந்து வருகின்றது ஏன் நாயக்க மன்னர்கள் காலத்தில்கூட எல்லாம் ஓர் ஆட்சியின் கீழ் இருக்கவில்லை. நம் தமிழ் இலக் கியங்களை ஆதாரமாக வைத்துப் பார்ப்போமே யானுலுங்கூட இந்த நான்குமொழிப்பிரதேசங்களும் ஒரே ஆட்சியில் இருந்ததாகக் காணப்படவில்லை.

பண்டைத் தமிழ் நாட்டின் எல்லை வடக்கே வேங்கடமும், தெற்கே குமரியும் கிழக்கும், மேற்கும் கடல்களும் எல்லையாக உடையதென்பதை,

> "வண்புகழ் மூவர் தண்புகழ் வரைப்பின்
> நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
> யாப்பின் வழிய தென்மனுர் புலவர்"

எனத் தொல்காப்பியரும்,

> "வட வேங்கடம் தென்குமரி யாயிடைத்
> தமிழ்கூறும் நல் லுலகத்து"

எனப் பனம் பாரனுரும்,

> "வேங்கடம் குமரி தீம்புனர் வவ்வமென்று"
> இந்நான் கெல்லைச் தமிழது வழக்கே"

எனச் சிகண்டி ஆசிரியரும்;

> "வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
> வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்று
> இந்நான் கெல்லை அகவையில் கிடந்த
> நூலதின் முறையே வாலிதின் விருப்பின்"

எனக் காக்கை பாடினியாரும்,

> "வடதிசை மருங்கு வடுகு வரம்பாகத்
> தென்றிசை யுள்ளிட்டு எஞ்சிய மூன்றும்
> வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
> நாட்டியல் வழக்கம்"

என சிறுகாக்கை பாடினியாரும்,

> "நெடியோன் குன்றும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் படுத்த தண்புனல் நன்னுடு"

என இளங்கோவடிகளும்,

கூறியுள்ளது நோக்கத்தக்கனவாம். ஆகவே கிருஸ்துவுக்குமுற்பட்ட அசோகன், தொல்காப்பியர் இவர்கள் காலம்முதல் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்வரையில் இருந்த நான்குமொழி மக்களும் ஒன்றுபட்டு இருக்கவில்லை. என்பது தெற்றென விளங்குகிறது அல்லவா?

ஆங்கிலேயர் ஆட்சியிலுங்கூட மைசூர் கொச்சி, திருவிதாங்கூர், புதுக்கோட்டை சமஸ் தானங்கள் எல்லாம் தனித்தனியே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே திராவிடநாடு கேட்பதைவிட, சுதந்திரத் தனித் தமிழ் நாடு அடைய வேண்டும் என்ற விழைவதே பொருத்தமுடைய தாகும். அதற்குத் தமிழகத்தின் தனிப்பெருந்தலைவர் பெரியார் அவர்களின் தலைமையின்கிழ் ஒன்று சேருவோம்; குறுக்குச் சால்பூட்டி, துரோகம்செய்து இனத்தையும் நாட்டையும் காட்டிக்கொடுக்காமல் தமிழர் உயர்வடையத் தலைவர்பெரியாரின் திட்டமே உருவானதும் உண்மை யானதுமாகும் என்று மக்கள் உணரவேண்டும்.

★○★

எழிலுடைப்பரத்தையின் . . .

செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதவண்
உலமந்து வருகஞ் சென்மோ தோழி
ஒளிறுவாட் டானேக் கொற்றச் செழியன்
வெளிறில் கற்பின் மண்டமர் அடுதொறும்
களிறுபெறு வல்சிப் பாணன் எறியும்
தண்ணுமைக் கண்ணின் அலேஇயர்தன் வயிரே.''

(ஆலங்குடி வங்கனூர்)

இனி, இப்பாட்டின்கண் உள்ள நயத்தைச் சிறிது காண்பேம்.

''எரியகைந் தன்ன தாமரை என்பது'' தாமரைப்பூவின் வளத்தையும், வயல் வளத்தைக் கண்டின்புறுதற்குரிய பகற்போதையும் குறிக்கும். நிலங்கள் மிக்க சேறுடைமையால் நல்லவிளைவைத் தருகின்றன என்பதைக் குறிக்கவே, ''தாமரைப் பழனம்'' என்றூர். தாமரையுள்ள விடத்துச் சேறு மிகுதியாக இருக்கும் என்பதைத் தாமரையின் வேறுபெயராகிய 'பங்கசம்' என்பதனுலறிக. (பங்கம் - சேறு, சம் – தோன்றல்) சிறப்புடைய தாமரையைக் கூறவே, குவளை முதலியனவும் ஆண்டுண்டெனக் கொள்க. வயல்களில் குவளை முதலியனவும் உண்டென்பதைக் கம்பர், ''கட்குடித் திருந்த உழவர் களையெடுக்க வயல்களிற் சென்று அங்குத் தங்களால் அன்பு பாராட்டப் பெற்ற உழத்தியரின் கண், கை, கால், முகம், வாய் இவைகளை பொக்கும் கருங்குவளை, தாமரை, ஆம்பல் ஆகிய மலர்களே அல்லாமல் வேறு களைகள் இல்லாமையால் அவர்கள் களையெடுக்காமல் உலாவித் திரிகின்றனர்'' எனவும், ''இதனுல் சிறியோர் பெண்கள்பால் வைத்த நேயத்தைவிடார் என்ற உலகியல் விளங்கும்'' எனவும் கூறிச்செல்வதனுல் அறிக.

''பண்கள்வாய் மிழற்றும் இன்சொல்
கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வாய் ஒக்கும்
களைஅலால் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர்
களைகலா துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றல்.''

[கம்பர்]

''பொரி யகைந் தன்னமீன்'' என்பதனுல், மீன்கள் துள்ளியெழும் வேகத்தால் எழுந்த இடத்திலேயே விழாது கண்ட கண்ட இடங்களில் விழும் என்பதை அறியலாம் இப்பொழுதும், நெற்பொரி முதலிய பொரிகளை வறுப்போர், அப்பொரிகள் பலவிடங்களில் சிதறிப் பயனின்றிப் போகா வண்ணம் மேல் மூடியமைத்து வறுப்பதைக் காண்கின்றே மன்றே? ''பொங்கு மீன்'' என்பது, இளமை, அறியாமை அச்சமின்மை ஆகிய இவற்ருல் துள்ளு மீன் என்றபடி. இதனை இளமை, அறியாமை, அச்சமின்மை ஆகிய இவற்ருல் துள்ளி அளவு கடந்து ஒருவன் செல்லக்காணின் என்னடா, பொங்குகிருய்? என்று உலகவர் கூறுவதனுலறியலாம்.

''பறக்க முடியாத சிச்சிலி, தான் உண்ணக் கருதிய மீனுக்குச் சமீபத்தில் உள்ள இலேயில் தங்கியிருந்தும் அதனைக் கவரமாட்டாது'' என்பதனுல், ''பறக்கும் வன்மையுள்ள இளஞ்சிரல் அதற்குத் தூரமாகிய மரக்கொம்பிலிருந்தும் அம்மீனைக் கவர்ந்தேகும்'' என்பது பெறப்படும். எனவே, இளமை கழிந்து ஊக்கம் இழந்த தலேவி ஒரு வீட்டிலே தன் கணவனைக் கொண்டிருந்தும் அவனைத் தன் வசமாக ஆக்கிக் கொள்ளமாட்டாளாக, இளமையும் ஊக்கமும் உடைய யாம் சேரியிருந்தும் அவனைத் தொடுத்துக் கொண்டோம்'' என்பதைப் பரத்தைக் குறிப்பாகக் குறிப்பிட்டாளாம்.

தொல்காப்பியத்திற் கூறப்படும் எழுத்தும் சொல்லும் பொருளும் ஆகிய இலக்கணங்கள் யாவும் தமிழுக்கே உரியனவாம். வடமொழிக்குரிய இயல்பெதுவும் தமிழியல் நூலாகிய தொல்காப்பியத்திற் சொல்லப்படவில்லே.

– புலவர் வெள்ளைவாரணர்.

''தன் கொழுநனை நம்மொடு புலக்கும்'' என்பது, தனக்குக் கணவனுயினனை நாம் நமக்கு உரியனுக்கிக்கொண்டோம் எனக்கூறிப்பொருமைப் படுகின்ருள் என்று கூறியபடி; முன்னர்க் குறிப்பால் தலைவனை எம்வசம் ஆக்கிக்கொண்டேன் என்றவள் ''நாமது செய்யாமாயினும்'' என்றது, இழிந்த மக்கள் தாம் செய்யும் தவற்றை வெளிப்படையாய்ச் செய்வதாக ஒப்புக்கொள்ளார் என்றபடி. அக் காரியம் செய்யாத பொழுது, ஏன் முனிவு கொள்ள வேண்டும் என்பார்க்கு விடையாக அவள் எம்மைப் பற்றிப் புறங்கூறிப் பழிக்கின்ருள்; அதனை எம்மால் தாங்க முடியவில்லை என்பதைக் கூறக் கருதியவள் ''உய்யாமையில்'' என்ருள்.

''செறிதொடி தெளிர்ப்ப வீசி'' என்பது, வளையல்களின் மிகுதியையும் மிடுக்குடைய நடையையும் குறிக்கும். ''சிறிதவண் உலமந்து வருகம்'' என்பது, நாம் சிறிதுபொழுது அங்குப் போய்ச் சூழ் வருதலே தலைவிக்குப் பெருந்துன்பம் விளைக்கும் என்பதையும், அவட்கு நாம்வேருென்றும் செய்ய வேண்டுவதில்லை என்பதையும் புலப்படுத் தும். இக்காலத்தும் சில தாழ்ந்த மக்கள் தமக்குப் பகையாயினுரை அச்சுறுத்தற்கு எண்ணின், பகை வரைக் குறிப்பிட்டு, அவர்கள் என்ன நினைத்துக் கொண்டார்கள்? வாருங்கள், அந்த வீதியின் வழி யாகச் சற்றுப் போய் வருவோம் என்று சொல்லித் தம் தோழர்களை அழைத்தலை நாம் கண்கூடாகக் காண்கின்ருேமன்ருே?

''ஒளிறுவாள்'' என்பது, பகைவர் உடலில் அடிக்கடி தோயும் இயல்புடையவாள் என்பதைக் குறிக்கும். ஆயுதங்களில் வாள் சிறப்புடையதாகும். 'கொற்றச் செழியன்' என்பது, செழியன் மிக்க வெற்றியுடையன் என்பதைக் குறிக்கும்.

''வெளிறில் கற்பின் மண்டமர் அடுதொறும்'' என்பது, குற்றமற்ற படைக்கலப் பயிற்சியுடையார், போரில் தோல்வியையெய்தாது வெற்றியையே பெறுவர் என்றபடி. ''அடு தொறும் களிறுபெறு வல்சிப்பாணன்'' என்பது, அடிக்கடி போர் நிகழ்ந்த தென்பதையும், அவற்றில் செழியன் வெற்றியே பெற்று வந்தானென்பதையும், வெற்றி பெறுந் தோறும் பாணர் முதலாயினர் பெரும் பரிசு பெற்ருர் என்பதையும் புலனுக்கும்.

''தன் வயிறு அலைஇயர்'' என்பது, இழிந்த மக்கள் தமக்கஞ்சித் தம் பகைவராயினர் தம்மைத் தாமேயடித்துக் கொண்டு துன்புறுவதைக் காணின், மிக்க இன்பம் உறுவர் என்பதைக் குறிக்கும்.

★ ▭ ★

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய

தொல்காப்பியத்திலே இது முதல் 15 செய்யுட்கள் இடைச்செருகலே

புலவர்–வெள்ளைவாரணர்.

சூர்யா ஸ்வீட் ஸ்டால்

தஞ்சாவூர்.

வாடிக்கையாளர்கட்கும், நண்பர்கட்கும் கழகத் தோழர்கட்கும் எங்கள் பொங்கல் நல்வாழ்த்து.

இனிப்பு. காரம் வகைகளுக்குச் சிறந்த இடம்

சூர்யா ஸ்வீட் ஸ்டால்

உரிமையாளர்:

சாமி. நாகராசன்,

மணிக்கூண்டு, தஞ்சை.

எல்லோராலும் மிகவும் புகழப்படுகிறது

கிருஷ்ணு பிஸ்கட், கேக்ஸ் ரொட்டிகள்

சர்க்கார் ஆஸ்பத்திரி கண்ராக்டர்ஸ்

தேனீர், திருமண வைபவங்களுக்கு சப்ளை செய்பவர்கள்.

மறவாதீர்

கிருஷ்ணு பிஸ்கட் பாக்டரி

இரயில் ரோடு | தெற்கலங்கம்
குடந்தை | தஞ்சை

வேலூர் சிறையில் வீரத்தாய்மார்

A. P. J. மனோரஞ்சிதம்

சிறையிலிருந்து விடுதலையடைந்தபிறகு நாங்கள் பலஊர்களுக்குப் பிரச்சாரத்துக்காகச்சென்றிருந்தோம். என்னைக்கண்ட பெண்களெல்லாம் சிறைவாழ்வைக் குறித்த தகவல்களை மிகஆவலாகக் கேட்டனர். பெண்கள் சிறை எப்படி இருக்கிறது? என்பதைக் குறித்து அனைவரும் அறிந்துகொள்ள இந்தக் கட்டுரை சிறிது உதவட்டும்! அடுத்து வரும் போராட்டங்களில் பெண்கள் ஏராளமாகப் பங்கெடுக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு தைப் பொங்கலன்று வேலூர் சிறையிலே சாதிஒழிப்புக்காக, அரசியல் சட்டத்தின் நகலை எரித்துவிட்டுக் கைக்குழந்தைகளுடன் கர்ப்பத்துடன், கணவன் ஒருசிறையிலே மகன் ஒரு சிறையிலே என்று தனித்தனியே பிரிந்து மனம் வாடிக்கிடந்த தாய்மார்கள் அனேகம்பேர், அவர்கட்கெல்லாம் இவ்வாண்டு பொங்கல் நாள் மகிழ்ச்சித் திருநாளாக நிச்சயம் இருக்கும். ஆனால் கடந்த பொங்கலைச் சிறையிலே கழித்து, வரும் பொங்கலைக் கொண்டாட ஆவலுடன் இருந்த வீரர்கள் பன்னிருவர் இன்னுயிரைப் பாழும் சாதி பலிகொண்டு விட்டதை நினைத்துக் கண்ணீர் விடாமலிருக்க முடியவில்லை-நம்மால்,

சுமார் 50 பெண்கள் வேலூர்ச் சிறையிலே இருந்தோம். இரண்டு திங்கள் முதல் ஒன்பது திங்கள்வரை கடின காவலும், வெறுங்காவலும், பல வாருகத் தண்டனையடைந்து, பல மாவட்டங்களைச் சேர்ந்தோர் ஒருங்கே சந்திக்கும் வாய்ப்புச் சிறையிலே எங்கட்குக் கிடைத்தது. சென்னையிலிருந்து பதின்மூன்று பெண்கள் சென்றிருந்தோம். எட்டுப் பேருக்கு வெறுங்காவல். 'பி' வகுப்பில் எனக்கும் தோழியர் சுசிலா அம்மையாருக்கும் கடின காவல ஆனல் சிறைவாழ்க்கை மிகக்கடினமான வாழ்க்கையே; எல்லா வேலையும் செய்யும்படி இருக்கும்: மிக மோசமான புழுக்கள் நெளியும் உணவுதான் கிடைக்கும் என்றெல்லாம் பலர் கூறக் கேட்டிருக்கிறோம். நாங்களும் அவ்வாறே நினைத்துச் சென்றோம். ஆனால் நாங்கள் நினைத்ததற்கு மாருக சிறை நிர்வாகம் அமைந்திருந்ததைக் கண்டு மிகவும் வியப்புற்றோம்.

முதலில் சில நாட்கள் பழகும்வரை கடினமாக இருந்தது. பிறகு நாங்கள் சிறைவாழ்க்கைக்கு எங்களைத் தயார்செய்து கொண்டோம். முறைப்படி காலை ஆறு மணிக்கு எழுந்து காலைக்கடன் முடித்துக் கேழ்வரகு கஞ்சியோ, ரொட்டியோ. (காப்பியோ) செய்து சாப்பிட்டுவிட்டு வேலைக்குச் செல்வோம். நாடா பின்னுதல், நூல் சுற்றுதல், தையல்வேலை கேழ்வரகு குத்தி அரைத்தல் துண்டுகள் நெய்தல் முதலான வேலைகள் கடின் காவல் பெற்ற பெண் கைதிகளுக்குத் தரப்படுகின்றது. எனக்கும் தோழியர் சுசிலா அம்மையாருக்கும் தையல் வேலை கொடுக்கப்பட்டது. அங்கு வரும் கடினகாவல் கைதிகளுக்குக் காடா வெள்ளைப் புடவை, சட்டை சிறை உடையாகத் தரப்படுகிறது. அந்தச் சட்டைகளை நாங்கள் சரியாகக் கத்தரித்துத் தைக்கவேண்டும். எங்கட்கு முன்னமே தையல்வேலை தெரிந்திருந்ததால் அவ்வேலை ஒன்றும் கடினமாகத் தோன்றவில்லை. பகல் 12 மணிக்குச் சாப்பிடுவோம். நாங்களே சமைத்துச் சாப்பிட வசதியளிக்கப்பட்டிருந்ததால் உணவும், உண்ணமுடியாத அளவு மோசமாகஇல்லை. ஏதோ கொடுக்கப்பட்ட சாமான்களை நிரவி ஒரு வகையாகச் சமைத்துச் சாப்பிட்டோம். ஒரு நாளைக்கு இரண்டுபேர் சமைப்போம். பெரும்பாலும் நானும், அறிவுக்கொடி (பாவலர் மகள்) தோழியர் சுசிலா அம்மையார் மூவருமே சமையல் வேலையைக் கவனித்துக் கொள்வோம். பரிமாறும் பணியைத் தினமும் நானே செய்தேன்! ஸ்டோர் ரூமிலிருந்து அரிசி, பருப்பு, விறகுமுதல் காய்கறிவரை திருமதி பட்டு (பாவலர்) அவர்கள் வாங்கிவந்து போட்டு விடுவார்கள். திருமதி லட்சுமி அம்மையார் நாங்கள் சாமான்கள் வைத்துள்ள இடத்திற்குக் குரங்குகள் வராதபடி காவல் காக்கும் பணியை ஏற்றுக்கொண்டார்கள்.

பொதுவாகப் பெண்கள் சேர்ந்தால் சண்டை குழப்பம் வீண்பேச்சு வம்புகள் இவை மலிந்திருக்கும் என்று கூறுவார்கள். ஆனல் நாங்கள் யாவரும் ஒரு சிறு மனத்தாங்கல்கூட இல்லாமல் எல்லோரும் கலந்து ஆளுக்கு ஒரு வேலை, அவரவர் சிறப்பாகச் செய்யும் அலுவல்களை அவரவர் கவனித்து வீண் குழப்பங்களின்றி மிக அமைதியான முறையில்

நன்றாக நடந்துகொண்டோம். 'சி' வகுப்பில் வந்திருந்த மற்ற தாய்மார்களும் அதேபோல் ஏறக்குறைய ஒற்றுமையாக இருந்தார்கள். அதுதான் மிகவும் போற்றத்தக்கது ஆகும். குடும்பத்தைவிட்டுக் குழந்தைகள், முதுமைப்பெற்றோர், சுற்றத்தார் கணவன் யாவரையும் பிரிந்து ஒரு பெண் சிறையில் எவ்விதகுற்றமும் புரியாமல் வாழ்வது, பல அசௌகரியங்களைத் தாங்கியிருப்பது என்றால் அது தந்தை பெரியார் அவர்களது பெரும் படையைத் தவிர வேறு எங்கும் காண்பது அரிது! அரிது!! ஏனெனில் அங்குள்ள சிறை அதிகாரிகளே பாராட்டுமளவு கட்டுப்பாடாகச் சிறை விதிகட்கு முரண்படாமல் நடந்துகொண்டோம். எங்கட்குமுன் பல அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்திச் சிறைசென்றுஅங்குப்புரிந்த அட்டகாசங்களைச் சிறை நிர்வாகிகள் எங்களிடம் கூறித் திராவிடர் கழகப் பெண்கள் பெரியார் ஆணைக்குக் கட்டுப்பட்டு மிக நல்லமுறையில் இருக்கிறார்கள் என்று வியந்து பாராட்டிப் புகழ்ந்தனர்.

வேலூர் பெண்கள் சிறை நிர்வாகம் உண்மையிலேயே மிகத்திறமையாகச் சட்டப்படி நடைபெறுகிறது. நோயுற்றபோதும் குறிப்பாக நன்கு கவனிக்கின்றனர். தினமும் சமையல் அறைக்கு டாக்டரும் சிறை மேலதிகாரியும் (Supt) வந்து உணவைச் சுவைத்துப் பார்த்தபின்னரே கைதிகளுக்கு உணவளிக்கப்படுகிறது. தினம் தவறாமல் காலை 7 மணி முதல் 10-30 வரை பெண் மருத்துவர் சிறை மருத்துவ விடுதிக்கு வந்து நோயுற்றவரைப் பரிசோதித்துத் தக்க மருந்துகள் தந்து தகுந்தஉணவு தருகிறார்கள். ஒவ்வொரு பொருளும் வெளியிலிருந்து வருவது டாக்டர் பரிசோதனைக்குப் பிறகே உள்ளே அனுமதிக்கப்படுகிறது. வெளியிலிருந்து நோயுடன் கைதிகள் உள்ளேவந்து குணமடைகிறார்களேதவிர, பெரும்பாலும் சிறையில் இருக்கும் போது நோய் வருவது தடுக்கப்படுகிறது. இந்த வகையில் வேலூர்ப் பெண்கள் சிறை அதிகாரிகளை நாம் போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கட்கு வேலைநேரம் தவிர மற்ற நேரங்களில் பொழுது மிகச் சுலபமாக கழிவதற்குப் பேருதவி புரிந்தது திருச்சி வாசுகி கலா மன்றத்தைச் சேர்ந்த இராவணன்என்ற சிறுவனும், விடுதலை ஏடும்தான் இரண்டரை வயதே நிரம்பி இருந்தாலும் அச்சிறுவனது அறிவுக் கூர்மை மிகவும் வியக்கத்தக்கதாகும். பகல் 12 மணிக்கு உணவு முடிந்ததும் இரண்டுமணிவரை அவனோடு அரட்டை அடிப்பதே எங்கள் முதல்வேலை. ஒரு குச்சியைக் கையில் எடுத்துக்கொண்டு சாக்ரடீஸ் பெரியார் என்றால் நாங்கள் வாழ்க என்று சத்தம்போடவேண்டும். பார்ப்பானே வெளியேறு என்றெல்லாம் சத்தம்போட்டு மற்றவர்களை வேடிக்கைப் பார்க்கக் கூட்டிவிடுவான். கலா நிகழ்ச்சியில் நடக்கும் பகுத்தறிவுப் பாடல்கள் நடனம் முதலியவற்றைப்பாடி ஆடி எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவான். அங்குள்ள சிறை அதிகாரிகளை எல்லாம் தன் அறிவார்ந்த பேச்சுக்களால் மிகவும் கவர்ந்துவிட்டான். நீ எதற்காக இங்கே வந்தாய்? என்றால்; சாதி ஒழிய அரசியல் சட்டத்தைக் கொளுத்தினேன். அதனாலே வந்தேன் என்பான். இன்னொருமுறை கொளுத்துவியா? என்றால் எங்க பெரியார் தாத்தா சொன்னா கொளுத்துவேன் என்று பதில்கூறுவான் யாரிடமும் அஞ்சாமல் பழகும் தன்மை சிறுவயதிலேயே அவனிடம் அமைந்திருந்தது எங்கட்கு மிகவும் பிடித்திருந்தது.

பிற்பகல் 2 மணிக்கு வேலைக்குச் சென்று மாலை 4-30 மணிக்குத் திரும்புவோம். துணி துவைப்பது போன்ற எங்கள் சொந்த வேலைகளைக் கவனித்துவிட்டு 5மணிக்குச் சாப்பிடுவோம் மாலை 6மணிக்கு அறையில் பூட்டப்படுவோம் மறுநாள் காலை 6 மணி வரை. அந்தநேரம்தான் சிறிது கடினமாக இருந்தது ஒரே இடத்தில் பனிரெண்டு மணி நேரம் அடைந்திருப்பது யாருக்கும் சிறிது கடினம்தான். விடுதலை படித்தும், பல நூல்கள் படித்தும் காலம் கழித்தோம். உறக்கம் வருவது அரிதாக இருந்தது. நம் இயக்கத்தில் பெண்களை எப்படிச்சேர்ப்பது நாம் எவ்வாறு இனி இயக்கத்திற்குத் தொண்டுபுரிவது என்றெல்லாம் பல முடிவுகளைச் சிந்திக்க வாழ்வில் ஊக்கமும் உற்சாகமும் அடைய, பல படிப்பினைகளை உணரச் சிறைவாழ்வு மிகவும் பயன்பட்டது.

பொதுவாக ஒவ்வொருவரும் சில நாட்களாவது சிறை சென்றால்தான் முழு மனிதர்களாக பல அனுபவங்களைப்பெற முடியுமென்பது எனது தாழ்வான கருத்தாகும். நாங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்ற பெண் கைதிகளுடன் பேசிப் பழகுவோம். கணவனைக் கொன்றவர்களும், குழந்தையைக் கொலை செய்தவர்களும், சாராயம் காய்ச்சிப்பிடிபட்டவர்களும், திருடியவர்களுமாகஇப்படிப் பலவகைக் குற்றங்கள் புரிந்தவர்களைச் சந்தித்தோம். ஆனால் இத்தகைய குற்றங்கள் பலர் செய்வதற்கு நமது நாட்டின் சமுதாயச் சூழலும், வறுமையுமே பெருங் காரணமாக, அடிப்படையாக அமைந்திருப்பதுதான் என அறிந்தோம். சமுதாயமுறை திருந்தி, ஒருவர்க்கொருவர் உயர்வு, தாழ்வு, அடிமை எண்ணங்களகற்றி ஆண் பெண் இருவரும் கல்வி கற்றுப் பகுத்தறிவு பெற்றார்களானால் பெரும்பாலும் இத்தகைய குற்றங்கள் நாட்டில் நடைபெறாதென்பது திண்ணம் அத்தகைய இழிவகற்றும் பகுத்தறிவு பரவச் செய்யும் அரும் பெரும் பணியை சமுதாய சீர்திருத்தப் பணியை நமதியக்கம் முதன்மையாகக் கொண்டு தொண்டாற்றுவந்த நினைத்து, வருங்காலத்தில் மக்கள் வாழ்வு உயரப் பணியாற்றுகிறோம். என்ற பூரிப்பில், பெருமிதத்தில் நாட்களைக் கடத்தினோம். இப்படியாக வேலூர் சிறையை நாங்கள் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக மாற்றிக் கொண்டு மகிழ்வுடன் இருந்தோம்! ★

ஒலி நயமும் அதன் பயனும்

டாக்டர், மு. வரதராசனார் M. A. M. O. L. Phd.

ஒரு நாடக மண்டபத்திற்குள் கால்வைத்த வுடன், மேடையில்காண்பன எல்லாம் கற்பனை என்ற எண்ணம் மெல்லத்தோன்றி உள்ளத்தை மயக்கத் தொடங்கும். மேடையில் காணும் பகல், உண்மைப் பகல் அன்று; அங்குக்காணும் நிலவும், உண்மை நிலவு அன்று; அங்கு நடை பெறும் கொலை முதலியனவும் உண்மை அல்ல; நடிக்கும் மாந்தரும் கதை மாந்தர் அல்லர். ஆயினும் உண்மை உலகம்போலவே அவற்றை எல்லாம் நம்பி உள்ளம் மயங்கி உணர்ச்சி வயப் படுகிறது. அதுபோலவே, பாட்டின் ஒலிநயம் (rhytum) உள்ளத்தை மயக்கிக் கற்பனை உலகத் திற்கு ஈர்த்துச் செல்வதாகும். செவி அந்த ஒலி நயத்தை உணர்ந்தவுடனே, உள்ளம் கற்பனையை உணர்ந்து பாட்டின் உணர்ச்சி யைப்பெற முனைகிறது.

தாயின் தாலாட்டைக் கேட்டவுடன், அல்லது தொட்டிலின் ஒழுங்கான அசைவை அறிந்தவுடன், அல்லது தாயின் கை தன் முதுகை மெல்லத் தட்டும் ஒழுங்கை உணர்ந்த வுடன், குழந்தையின் மனம் உறக்கத்தில் ஈடுபடத் தொடங்குகிறது. அதுபோல் பாட் டின் ஒலிநயத்தைக் கேட்டவுடன், படிப்ப வரின் மனம் அறிவையும் ஆராய்ச்சியையும் கைவிட்டு உணர்ச்சியையும் கற்பனையையும் நாடத் தொடங்கல் வேண்டும். நனவுலகத்தை விட்டு வேறோர் உலகத்தில் - கற்பனை உலகத் தில் நடக்கத் தொடங்குகிறோம் என்பதை ஒலி நயம் நினைவூட்டுவதாக அமைகிறது.

குழந்தை தாலாட்டைக் கேட்டு உறங்கத் தொடங்குவதற்கு மாறாக, சில நாட்களில் உறக்கம் வந்ததும் குழைந்தையின் மனம் தாலாட்டை நாடும்; தொட்டில் அசைய வேண்டும் என்று விரும்பும்; தாயின் கை தன் முதுகைத் தட்ட வேண்டும் என்று விழையும். அதுபோல், படிப்பவரின் மனம் அறிவுலகத்தி லிருந்து உணர்ச்சியுலகத்தை எட்டும்போது, உடனே அதற்கு ஏற்றதாகிய ஒலி நயத்தை நாடும்.

உரைநடையும் பாட்டும் கலந்த கட்டுரை யை அல்லது நூலைப் படிக்கும்போது இத் தகைய அனுபவத்தையும் காணலாம். வாய் விட்டுப் படிக்காமல் மனத்திற்குள்ளேயே உரைநடையைப் படித்துக் கொண்டிருப்பவர் இடையே ஒரு பாட்டு வந்தவுடன் அதன் உணர்ச்சி உள்ளத்தில் வரப்பெற்றதும், வாய் திறந்து பாட்டைப் படிக்கத் தொடங்குவது வழக்கம். உணர்ச்சி தனக்குத் துணையாக ஒலி நயத்தை நாடுவதையே இது காட்டுகிறது.

கிராமங்களில் பலமுறை கேட்டுப் பழகிய பாரதம் இராமாயணம் முதலிய கதைகளைப் படிப்பவர், உணர்ச்சி இல்லாமல் படிக்க முடியாத காரணத்தால், அவை உரைநடையில் அமைந்திருந்த போதிலும், அந்த உரைநடைக் கதைகளையும் பாட்டுப்போல் இசையோடு நீட்டிப் படிப்பது வழக்கம். குழந்தை தாலாட்டை விரும்பி நாடுவதுபோல், உணர்ச்சி மிக்க அவர்களின் உள்ளம் கதையின் கற்பனை யில் நுழைந்தவுடன், ஒலிநயத்தை நாடுவதால் தான், அவ்வாறு இசையோடு நீட்டிப் படிக்க விரும்புகின்றனர்.

பாட்டும் கற்பனை நிறைந்த கதையும் படிக் கும்போது ஒலிநயம் துணைக்கு வருவதைக் கண்டோம். பாட்டும், கதையும் இல்லாமல், உணர்ச்சிமட்டும்உள்ளபோதெல்லாம்ஒலிநயம் உடன் அமைவதை வாழ்க்கையில் காணலாம்; சிரிப்பிலும் அழுகையிலும் ஒலிநயம் இருப்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். குழந்தை யாயினும், முதியவராயினும், ஒலியுண்டாகச் சிரித்தாலும் அழுதாலும் அந்த ஒலியில் அதைக்

காணலாம். பெருமகிழ்ச்சியோடு சில சொற்கள் பேசும்போதும், அல்லது பெருந்துயரத்தோடு சில சொற்கள் பேசும்போதும், நம்மை அறியாமலே அந்தப் பேச்சில் ஒலிநயம் அமைகிறது. சினம் மிகுந்த பேச்சிலும் அதைக் காணலாம். எந்த உணர்ச்சியும் உடம்பின் அசைவாகவோ, பொருளற்ற ஒலியாகவோ, பொருளுடைய சொற்களாகவோ புலப்படும் போதெல்லாம் ஒலிநயம் இல்லாமல் புலப்படுவதில்லை. இயற்கையாகவே உணர்ச்சியோடு இயைந்தது ஒலிநயம் என்பதை இவை விளக்குகின்றன.

ஆகவே, உணர்ச்சியை உயிராக உடைய பாட்டுக்கு ஒலிநயம் எவ்வளவு இன்றியமையாதது என்பது விளங்கும். பாட்டில் புலவரால் அமைக்கப்பட்ட உணர்ச்சியைப்படிப்பவர்க்கு உய்ப்பது ஒலிநயமே ஆகும். வெறுஞ்சொற்கள் கருத்துக்களை மட்டுமே விளக்க வல்லன. புலவரின் உணர்ச்சியனுபவத்தை விளக்கும் ஆற்றல் அந்தச் சொற்களுக்கு இல்லை. ஆனால் அந்தச் சொற்களின் வாயிலாக ஒலிநயம் வந்து உதவுகிறது. ஒலிநயம் இல்லாமல், புலவரின் உணர்ச்சியனுபவம் பாட்டின் சொற்களில் வாழ வழி இல்லை. ஒலிநயத்தின் துணை இல்லாமல் சொற்களை மட்டும் கொண்டு படிப்பவர் அந்த உணர்ச்சி யனுபவத்தைப் பெறுவதற்கும் இயலாது.

சொற்களை ஏட்டில் காணும் போது, அல்லது ஏட்டில் உள்ளவாறு நிறுத்திப் படிக்கும்போது, அல்லது ஏட்டில் உள்ளதைப் படிப்பதுபோல் உணர்ச்சியின்றிப் பேசும் போது, அவை கருத்துக்களை மட்டுமே உணர்த்துகின்றன. உணர்ச்சியையும் புலப்படுத்த வேண்டுமானால், அந்தச் சொற்களால் மட்டும் முடியாது. உணர்ச்சிக்கு ஏற்ற முகக் குறிப்புக்கள் கொண்டு, கைகளின் அசைவுகளையும் சேர்த்தால், அந்தச் சொற்களுக்கே உணர்ச்சியும் சேர்ந்தமைகிறது. குரலொலியை எடுத்தும் படுத்தும் வன்மை யாக்கியும் மென்மை யாக்கியும் நீட்டியும் குறுக்கியும் மாற்றி உணர்ச்சியைப் புலப்படுத்துதலும் உண்டு. இவையெல்லாம் பேச்சில் இயலும். ஆனால் பாட்டில் என் செய்வது? பாட்டை இயற்றிய ஆசிரியர் எங்கோ உள்ளார் (அல்லது என்றோ இருந்தார்.) அவர் தம்முடைய முகக் குறிப்புக்களையோ கை அசைவுகளையோ பாட்டோடு விட்டுச்செல்லவில்லை; அவ்வாறுவிட்டுச் செல்லல் இயலாதஒன்று. ஆகவே, அவருடைய உணர்ச்சியை அந்தப் பாட்டின் சொற்கள் உணர்த்தவில்லை. அந்தக்குறையைப் போக்கவே ஒலிநயம் பயன்படுகிறது. அந்த ஒலிநயத்தில் புலவர் உற்ற உணர்ச்சி இல்லை; ஆயின் அதன் சாயல் படிந்துள்ளது எனலாம். அதைக் கொண்டு பாட்டைப் படிப்பவர் புலவருடைய உணர்ச்சியைப் பெற முயலல் வேண்டும். முயற்சி, நெறியோடு அமைந்தால், விரும்பிய பயனைத் தருகிறது. இதற்கு வேறு சான்று வேண்டா. தலைமுறை தலைமுறையாக ஒரு காவியத்தைப் படித்து, அனைவரும் ஒரே வகையான உணர்ச்சியை வழிவழியாகப் பெற்று வருதலே போதிய சான்றாகும்.

கார் காலத்தில் திரும்பி வருவதாகக் கூறித் தலைவன் பிரிந்து சென்றான். கார் காலம் வந்துவிட்டது. தலைவன் வரவில்லை. அந்நிலையில் தலைவி நினைந்து நினைந்து ஏங்குகின்றாள்.

"முல்லை அரும்புகள் முற்றிவிட்டன. காடுகள் கார்காலத்து அழகை நிரம்பப்பெற்று விட்டன. நம் அணிகலன் நெகிழுமாறு பிரிந்தவர் இன்னும் வரவில்லை. ஆனால் என் சிறந்த அழகையெல்லாம் அழிக்கவல்ல மாலைக்காலம் வந்துவிட்டது" என்கிறாள்.

முகைமுற் றினவே முல்லை; முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்
வால் இழை நெகிழ்த்தோர் வாரார்
மாலை வந்தன்றென் மாண்நலம் குறித்தே

குறுந்தொகை, 188

என்று பாட்டைச் சிலமுறை படித்தால், உணர்ச்சியை ஒருவாறு பெறமுடிகின்றது. இப்பாட்டில் வியன்புனம், வாலிழை, வந்தன்று முதலிய அருஞ்சொற்கள் – இன்றைய தமிழ் வழக்கில் இல்லாத சில சொற்கள் – உள்ளன. அவற்றைக் கற்றுப் பயின்ற பிறகு, இப் பாட்டைத் திரும்பத் திரும்பக் கற்றால், அந்த உணர்ச்சியை மேலும் தெளிவாகப் பெறல் கூடும். ஒலிநயத்தில் திளைத்த செவி வாய்க்கப் பெற்றால், பாட்டின் கற்பனை சிறந்த இன்பம் பயப்பதாகும். ஆகவே, எவ்வகையிலும் பயிற்சி குறைந்தவராயினும் பயிற்சி நிறைந்தவராயினும் பாட்டின் ஒலிநயம் பயன் உள்ளதாக இருத்தலை உணரலாம்! ★

மாருட்டம்

"தமிழவேள்"

மாலை நேரம். சுமார் மணி 6 இருக்கும் நண்பர் ஒருவருடன் சாலையில் போய்க்கொண்டிருந்தேன். திடீரென்று நண்பர் என் கையைப் பிடித்து நிறுத்தினார்.

என்னய்யா? என்றேன்.

"பாம்பு" என்றார் பதட்டத்துடன்:-

எங்கே? என்றேன் – அதோ! என்றார்.

உலாக்கோலை (Walking Stick) ஓங்கியவாறே அவர் சுட்டிக்காட்டிய இடத்தை நெருங்கினேன். நான் அங்குக் கண்டது பாம்பல்ல! பழுதை. சிரித்த நண்பர் முகத்தில் ஏமாற்றம் நிலவியது.

இதைப்போன்ற நிகழ்ச்சிகள் எத்தனையோ – நிகழக்காண்கிறோம். தெருவில் சென்றுகொண்டிருக்கும் ஒருவரைத் தம் நண்பர் எனக்கருதி அழைத்து ஏமாறுவோர் பலர். அறியாமை, விரைவு, கூர்ந்து நோக்காமை. மயக்க உணர்வு முதலியவற்றால்தான் இத்தகைய மாருட்டங்கள் நிகழ்கின்றன. ஒருபுடையொப்புமை கருதிஒன்றை வேறொன்றாகத் துணிதல் இயல்பு, இது மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் பொதுவே.

மாருட்ட நிகழ்ச்சிகளைப் பொருளாக வைத்துக் கவிஞர்கள் புனைந்து தரும்பாக்கள் மிக்க சுவை பயப்பனவாம். அவை, அதிசயவணி வகைகளுள் ஒன்றாகிய திரிபதிசயம் அல்லது மயக்கவணி என்னும் அணியுள் அடங்கும். அத்தகைய பாக்களுள் இரண்டினை இங்குக் காண்போம்:

ஒரு மலை, வளம் மிக்க மலை, உயர்ந்தோங்கிய மரங்களும், தழைத்து வளரும் செடிகளும், தாவிப் படரும்கொடிகளும் பொருந்தியமலை. அதன் உச்சியிலிருந்து அருவியொன்று 'இழும்' என்னும் ஒலியுடன் இழிந்தோடுகிறது. செக்கச்சிவந்த காந்தட் பூக்கள் குலைகுலையாய்ப் பூத்துக் குலுங்கிக் காண்போர் கவனத்தையீர்க்கின்றன. வண்டுகளுக்கோ கொண்டாட்டம்; குழலிசையை நினைவூட்டும் ரீங்கார ஒலியுடன் இங்கும் அங்கும் பறந்துசென்று தேனை விரும்பிக் காந்தட் குலைகளில் பாய்கின்றன. வண்டுகளின் இச்செய்கையைக் கண்டுவிடுகிறது ஒரு குரங்கு. திகைக்கிறது. "அந்தோ! இந்த வண்டுகள் அறியாமையினால் எரிகின்ற நெருப்பிலே மூழ்கிவிட்டனவே, இவை இரக்கத்திற்குரியவை" என்று எண்ணி அவற்றைக் காப்பாற்றக் கருதி, வழிந்தோடும் அருவி நீரைத் தன் இருகைகளாலும் வாரி வாரி இறைக்கின்றது.

இக்காட்சியைக் காண்கிறார் அக்காலக் கவிஞர் ஒருவர், செங்காந்தட் பூக்களை எரிகின்ற நெருப்பாகக் கருதிக் கொண்டு, வண்டுகளுக்கு நன்மை செய்வதாக நினைத்துத் தீமை செய்யும் குரங்கின் செயல் அவர் கலையுள்ளத்தைத் தூண்டுகிறது. கவிதை எழுகிறது:

"குழல் இசைய வண்டினங்கள் கோழிலைய
செங்காந்தட் குலைமேல் பாய
அழல்எரியில் மூழ்கினவால் அந்தோ!
அளிய என்(று) அயல்வாழ் மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ அல்லன்"

(யாப்பருங்கலக்காரிகை. 28 மேற்.)

வேறொரு நிகழ்ச்சி:

ஒரு பெரிய ஆலமரம். வானளாவிய மிலார்கள். தூலம்போல் வளர்ந்த கிளைகள். அவற்றிற்குத் தூண்கள் என்று சொல்லும்படியாக வளர்ந்து நிற்கும் விழுதுகள். இத்தகைய ஆலமரத்தின் கிளையொன்றில் ஒரு பாம்பு தொங்கிக் கொண்டிருந்தது.

வழக்கம்போல் ஒருகுரங்கு ஆலமரத்தின் கிளைகளில் தாவித் தாவி விளையாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது தாவுவதற்காகத் தொங்கிக் கொண்டிருந்த பாம்பை விழுதென்று கருதிப் பற்றியது அவ்வளவுதான், தொட்டால் சுடும் என்பதை அறியாத குழந்தை விளக்கினைத் தொட்டுத் திடீரென்று கையைப் பின்னே இழுத்துக் குதிப்பதைப்போல் அக்குரங்கு கிளைக்குக் கிளை தாவி அங்கங்கே தொங்கும் விழுதுகளையெல்லாம் பாம்புகளாக எண்ணி, அஞ்சி விழுதுகளே தொங்காத மரத்தின் உச்சியில்போய்விட்டது. அங்கே குனிந்து பார்த்தது, தன் வால்மட்டும் தொங்கிக் கொண்டிருந்தது. அதுவும் பாம்புதானோ! என்ற பயம் குரங்குக்கு. உற்று நோக்கியது.

இந்தக் காட்சியை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் இக்காலக்கவிஞர். இதோ கவிதை! படியுங்கள். சுவையுங்கள்:

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழ்உள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

[அழகின் சிரிப்பு – பாரதிதாசன்]

வேண்டாத விளக்கம்

வித்வான் "வை மாணிக்கசாமி"

மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில்

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்ருர் வான்புகழ்வள்ளுவர். இக் குறளுக்குத் தந்த விளக்கவுரையில் பரிமேலழகியார் அறிவறிந்த என்றதனன் மக்களென்னும் பெயர் பெண்ணெழித்து நின்றது என்ருர். இதனல் பெண் மக்கட்பேறு சிறந்ததல்ல என்று விளக்குகிருர். இவ் விளக்கம் பொருந்துமா என்பதை ஆராய்வோம்.

மக்கள் என்ற சொல்லை ஒன்ருெழி பொதுச் சொல்லாகக் கொண்டே அங்ஙனம் பொருள்கூறிஞர் பரிமேலழகியார். இக்கருத்து முற்றிலும் வள்ளுவர் கருத்துக்கு மாறுபட்டது. என்னை? வள்ளுவர் அச் சொல்லைப் பலவிடத்திலும் ஆளுகின்ருர். பிள்ளைகள் என்னும் பொருளில் இருபாற்கும் பொதுச் சொல்லாக எட்டுக் குறளிலும் (60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68,) மாந்தர் என்னும் பொருளில் ஆறு குறட்பாக்களிலும் (196, 410, 600, 993, 997, 1071,) வீரர் என்னும் பொருளில் ஒரு குறளிலும் (770) ஆளுகின்ருர். எவ்விடத்தும் அவர் அச்சொல்லை ஒன்ருெழி பொதுச்சொல்லாக ஆளவில்லை. வாழ்க்கைத் துணை நலம் என்னும் முன் அதிகாரத்தில் பத்தாவது குறளில் மனைவாழ்க்கைக்கு நல்ல அணி நன்மக்கள் என்ருர் வள்ளுவர். நன்மக்கள் என்ற தொடரில் குறித்த கருத்தினையே மீண்டும் சிறப்புத்தந்து வலியுறுத்த அடுத்த குறளில் அறிவறிந்த மக்கள் என்ருர் எனத் துணியலாம். நன்மக்கள் ஆதற்கு அறிவறிந்தவர்களாக இருத்தல் வேண்டும் அன்ருே!

10×5 இனி மக்கட்பேறு பெறற்கரியது என்று மட்டும் கூறியிருப்பரேல் தீயமக்களால் வரும் ஏதப்பாடுகளைக் கூருதொழிந்தவர் ஆவர். ஆகவேதான் மக்கட்பேறு சிறப்புடையது. அதிலும் அறிவறிந்த மக்கள்பேருக இருத்தல் வேண்டும் என்பதைப் பின்னுங் கூறினுர்.

இதுதான் வள்ளுவர் கருத்தேயன்றிப் பெண்களை நீக்கி ஓதவேண்டும் என்பதல்ல.
மேலும்,

"தக்கார் தகவிலர் என்ப தவரவா
எச்சத்தாற் காணப் படும்"

என்ற குறளில் பெற்ருேர் தகுதி எச்சத்தாற் பெறப்படும் என்ருர். இங்கு எச்சம் என்ற சொல்லை ஆளுகின்ருர். "எச்சம் என்பது இருபாற்கும் உரித்தே" என்பது பிங்கல நிகண்டு. ஆகவே இருபாலாரும் பெற்ருேரின் தகுதியைக்காட்ட வல்லவர் ஆகின்றனர். இங்குப் பெண்களை நீக்கக்கருதாத வள்ளுவர் மக்கட்பேற்றில் நீக்கியிருப்பரோ? அன்றியும் தந்தை மகற்காற்றுநன்றி, மகன் தந்தைக்காற்றுமுதவி என்றெல்லாம் பிரித்தோதவேண்டிய விடங்களில் பிரித்தோதும் முறையும் வள்ளுவர்பால் உள்ளது. ஆகவே, பெண்களை நீக்குவது அவர் கருத்தாயின் பிரித்தோதி யிருப்பர்.

இன்னும் மக்கள் மெய்திண்டல், சொற்கேட்டல் பெற்ருர்க்குஇன்பம் என்றும், மக்கள் அளாவிய கூழ் இனிது என்றும், மக்கள் மழலைச்சொல் இனிது என்றும் வரும் தொடர்களில் உள்ள மக்கள் என்னும் சொல் இருபாலாரையும் குறிக்கும் என்பதில் ஐயமில்லை. இவற்ருல் பெற்ருேர்க்கு இன்பம் இருபாலாராலும் என்பது பெறப்படுமன்ருே? ஆகவே, இதுவரை கூறிய அகச்சான்றுகளால் பெண்களை நீக்குதல் வள்ளுவர் கருத்தல்ல என்பதை நன்கு தெளியலாம்.

இனிப் பரிமேலழகியார் கருத்தை ஏற்பதாயின் பெண் மக்களுள் அறிவறிந்தார் இல்லை என்ருகும். இலக்கண நூலொன்றைச் செய்தளித்த காக்கைப் பாடினியார் பெண்பாற்புலவர் அன்ருே! இன்னும் குறமகள் இளவெயினி, காவற்பெண்டு, வெண்ணிக் குயத்தி, ஆதிமந்தியார், பாரிமகளிர், பூதப் பாண்டியன் தேவியார், வெள்ளிவீதியார், நப்பசலையார், நக்கண்ணையார், பொன்முடியார் முதலான பெண்பாற் புலவர்கள் வள்ளுவர் காலத்திலும் அதன்பின்னும் வாழ்ந்துள்ளனர். இவர்தம் அறிவு எத்துணையும் ஆண்பாற் புலவர்களின் அறிவுக்குத் தாழ்ந்ததென்று கூறமுடியுமா? அன்றியும் முதனூல் என்று கருதப்படும் தொல்காப்பியத்திலும்,

மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள் தாமே ஆறறிவுயிரே"

என்று இருபாலார்க்கும் ஒத்த தன்மையில் அறிவுத் திறன் கூறப்பட்டுள்ளது.

மேலும் அகப்பொருளில் ஆண்மகனைத் தலைவன் என்றும், பெண்மகளைத் தலைவி என்றும் குறித்தார் தொல்காப்பியனுர். இதனல் இருபாலாரும் ஒத்தநிலையில் வைத்து எண்ணப்படுகின்றனர் என்பதைக் காணலாம். பழந்தமிழ் நாட்டில் ஆடவர் பெண்டிர் என்ற வடிவு வேற்றுமை பற்றி இரு திறத்தாருள்ளும் உயர்வு தாழ்வு என்பதில்லை. வள்ளுவரே வாழ்க்கைத் துணையின் இலக்கணங்கள் பல கூறுகின்ருர். மாண்புடைய மனைவி பெருதான் ஏதும் பெற்ருன் இல்லை என்ற கருத்தைப் பல்வேறு குறள்களில் கூறுகின்ருர் வள்ளுவர். அவள் மாட்சிபெற அறிவு வேண்டாமா? பெண்ணினம் அறிவற்றதாயின் மாட்சிமை பெறுதல் எங்ஙனம்?

திருக்குறள் கி. பி. மூன்ரும் நூற்ருண்டிற்கு முன் எழுந்தநூல். அதற்குரை செய்த பரிமேலழகியார் பதின்மூன்ரும் நூற்ருண்டில் வாழ்ந்தவர். ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் வந்தவர் தான் வாழும் காலக் கருத்துக்களை உளத்தில் கொண்டு உரைசெய்தார் என்பதை மறுக்க முடியுமோ?

ஆகவே மக்கள் என்றபெயர் பெண்ணெழித்து நின்றது என்பது வேண்டாத விளக்கம் என்க.

துளிகளின் ஓலம்

திருவாரூர், கே. தங்கராசு

"திராவிடமே எங்கள் லட்சியம்! பிரிவினையே எங்கள் மூச்சு! இன்றில்லாவிட்டால் நாளை, நாளையில்லாவிட்டால் மறுநாள் – இன்றேல் அடுத்த நாள் – இன்றேல் அதற்கடுத்தநாள் – இல்லாவிடில் என்றேனும் ஒரு நாள் திராவிட திருநாட்டைப் பிரித்தே தீருவோம்! ஆகவே காளையர்களே! கன்னியர்களே! கண்ணியம் மிக்கவர்களே! உங்கள் கையில் கிடைத்ததை எங்கள் பையில் போட்டு நிரப்புவதுடன் (பணம்தான்) தேர்தல் நேரத்தில் உங்கள் மேலான வாக்குகளை எங்கள் பெட்டியில் போட்டு எங்களையே தேர்ந்தெடுத்து அனுப்பி வையுங்கள். நாங்கள் பிரித்துக்கொண்டு வந்து தருகிறோம் உங்கள் திருநாட்டை."

நடந்துபோன தேர்தலில் நமது மாசித்தந்தை (அதாவது முன்னாள் தலைவர்) பெரியார் அவர்கள் நமது வழியிலே படுத்துக்கொண்டு மறித்து விட்ட காரணத்தால்தான் நம்மில் பதினைந்து பேர்மட்டுமே சட்ட மன்றத்தை எட்டிப் பிடிக்க முடிந்தது. வரப் போகும் தேர்தலில் நீங்கள் அவரை மதிக்காது எங்களையே பெருவாரியாக (அதாவது ஒரு சுன்னம் சேர்த்து) நூற்றிஐம்பது பேர்களைத் தேர்ந்து எடுத்து விட்டீர்களானால். அடடா! 1962-லே அமையும் நமது அமைச்சர் அவை! - அண்ணா ஏற்பார் இந்நாட்டின் தலைமையை! (தலையையல்ல) சொன்னால் சொன்னபடி நடக்கும் சற்புத்திரனாயிற்றேஅவர். எனவே முதற்கூட்டத்தொடரிலேயே சட்டமன்றத்தில் திராவிட நாட்டுப் பிரிவினைத் தீர்மானத்தைக் கொண்டு வந்து காரசாரமாகக் கழறுவார்! காங்கிரசார் மிரளுவர்! பாவம் அற்பர்களாயிற்றேஅவர்கள் (அதாவது அற்பஎண்ணிக்கையினர்) வேறு என்ன செய்ய இயலும் அவர்களால் எனவே மிரளுவர் – பொது உடமையர் புரளுவர். (அதாவது மூர்ச்சைபோட்டு விழுவர்.)

நமது நெடுஞ்செழியன் விளாசுவார்! வெறுஞ் செழியன் ஆமோதிப்பார்! - கருணா அடுக்குவார்! – மதி பொறுக்குவார்! (ஆதாரங்களை) -அழகன் அறைவார்! இத்தியாதி சிறப்புகளுடன் நமது மசோதா நிறைவேற்றப்படும்.

உடனே இங்கே முகாமிட்டிருக்கிற வடக்கத்தி கவர்னர் அதிலே கைச்சாத்திட மறுப்பார்! மேலிடம் (அதாவது டெல்லி) அதை ஏற்கமறுக்கும்! அடுத்த வினாடியே நமது அண்ணாவின் அமைச்சரவை (சீட்டாடும் கூட்டமல்ல; மந்திரிசபை.) பின் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்துவிடும். அதாவது ராஜிநாமா கொடுத்துவிட்டு, வந்துவிடும்! (பிறகு வழக்கம்போல விளையாட்டு?)

சில காலம் எதிர்க்கட்சிகளின் மந்திரி சபை – பிறகு பொதுத் தேர்தல்.

தேர்தல் என்றவுடன் நாம் விடுவோமா? உடனே நமதுகச்சேரியைக் கலைத்துவிட்டு (பேச்சுக் கச்சேரி என்று பொருள் கொண்டால் நலம். வேறு விதமாக எடுத்துக் கொண்டால் அதற்கு நான் பொறுப்பல்ல) உடனே ஓடிவந்து தேர்தல் களத்திலே குதிப்போம்!

குதிக்கவேண்டியதுதான் பாக்கி! உடனே வெற்றி! பெரும் வெற்றி! இம்முறை நூற்றி அறுபது இடங்கள்! – காமராசர் முகத்திலே கரி பூசப்படுகிறது! பெரியார் வெளியேறவே பயப்படுகிறார்! – மீண்டும் அமைச்சரவை–அண்ணா முதலமைச்சராகிறார்– சட்டசபை கூடுகிறது –பிரிவினைத் தீர்மானம் வருகிறது - மேலிடம் ஏற்கமறுக்கிறது – ராஜி நாமா – நாங்கள் கும்பலாக வீடுநோக்கித்திரும்பும்படலம். பினாமி மந்திரிகளை வைத்து வடக்குத் தெற்கை ஆள்கிறது கொஞ்சகாலம். பிறகு மறுபடியும்பொதுத் தேர்தல்.

இப்படியாக ஐந்துமுறைகள் நடைபெறுகின்றன – ஆண்டுகள் இருபத்திஐந்து ஓடுகின்றன – அண்ணா தாத்தா ஆகிறார். அப்போதும் தள்ளாடியபடியே சென்று மந்திரிசபை அமைத்துப் பிறகு ராஜிநாமாக் கொடுத்துத் திரும்புகிறார் – பிறகு என்ன நடக்கும்? தெரியுமா ? – அதிசயம் நடக்கும்!

அதாவது பண்டித நேரு எங்கள் அண்ணாவை அழைத்துப் பேசுவார்! உம், பேசுவார். எதைப் பற்றி – நாட்டுப் பிரிவினையைப் பற்றித்தான்.

இப்போது புரிகிறதல்லவா. ஆகவே காளையர்களே! கண்ணுக்குட்டிகளே! ... ... (மீண்டும் ஒப்பாரி) ... ... உங்கள் ஓட்டுக்களையெல்லாம் வரப்போகும் தேர்தலில் எங்கள் பெட்டியிலேயே போடுங்கள்! நோட்டுக்களை. இப்போதே தாருங்கள் (செலவு நிறைய இருக்கிறது) கொடிகளை புளிய மரந்தவறாது கட்டிவிடுங்கள்!

மேலே கண்டவாறு சாதாரண சில்லரைக் (அதாவது ரெக்ரூட்) கண்ணீர் துளிகளிலிருந்து அந்தக்கட்சியின் ஐம்பெருந்தலைகள் உள்பட எல்லா துளிகளுமே எந்த மேடையில் ஏறினும் ஒரே சீராக அதிசுத்தமாக ஓலமிடும்போது (கத்தும்போது என்று நீங்கள் சொல்வது தவறு) நாம் அவைகளைப் பற்றி என்ன நினைப்பது? நினைப்பது என்ன? திணை மாற்றி எழுதவே செய்கிறாயே அதுபோதாதா எனலாம் நீங்கள்!

சேச்சே! அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல பெரும் பெரும் பட்டதாரிகளும் – சட்ட நிபுணர்களும் ஷோக் மைனர்களும் – பதவிப் பிரியர்களும் – செந்நாப்புலவர்களும் – நடிப்புத் திலகங்களும் அதற்குள் அல்லவா நுழைந்து கொண்டு இருக்கிறார்கள்.

அந்தக் கட்சியை நாம் அவ்வளவு சாதாரணமாக மதிக்கக்கூடாது. எனவே நான் ஏதாவது திணையை மாற்றி எழுதி இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்! சரிதான் போப்பா ஒரு சாதாரண ரயில்நிலையப் பெயர்ப் பலகையை மாற்றக் கையால் ஆகாதவர்களா ஒரு நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகிறது!

எனக்கு அவமானமாக இருக்கிறது!

நான் என்ன சொல்வது?

அவர்களுக்கல்லவா அது (எது) இருக்க வேண்டும்! அது கிடக்கட்டும் . . . !

இந்தியாவின் ஐக்கியத்தையே பிரதானமாக வற்புறுத்தும் இந்திய அரசியல் சட்டம்; அதன்முதல் பாகம் பிரிவு (a, b, c.) இரண்டாவது பாகம். மூன்ருவது பாகப் பிரிவு (a, b, c, d, e, f.)

இத்தனைப் பிரிவுகளிலும் இந்தியாவின் ஐக்கியத்தைப் பற்றியும் அதனுடன் புதிய ராஜ்யங்களைச் சேர்ப்பதற்கும், இருக்கும் ராஜ்ய எல்லைகளைத் திருத்தி அமைப்பதற்கும் மட்டுமே உரிமை கொடுக்கிறதே தவிர இந்தியாவிலிருந்து சகல உரிமைகளுமுள்ள (Sovereign Rights) ஒரு நாட்டைப் பிரிப்பதற்கு அதிலே இடமிருக்கிறதா? அல்லது இந்திய அரசியல் சட்டத்தில் மொத்தமுள்ள 395 பிரிவுகளில், வேறு எந்த ஒரு பிரிவிலாவது இடமிருக்கிறதா?

எந்த ஒரு துளியாவது (அதாவது ஷோக் மைனராவது) இதைப் பற்றிக் கவனித்தது உண்டா — கவலைப்பட்டது உண்டா? வழக்கமாக ஆரம்பத்திலே கண்டவாறு ஒப்பாரி வைப்பதைத் தவிர கருத்தைச் செலுத்தியது உண்டா?

அரசியல் சட்டத்தில் இல்லாவிட்டால் என்ன? — நாம் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றக் கூடாதோ என்ருல் — அரசியல் சட்டத்துக்கு விரோதமான ஒன்றை — அரசியல் சட்டம் அனுமதிக்காத ஒன்றை — நிறைவேற்ற; அந்த அரசியல் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து தேர்தலில் கலந்து கொள்வதோடு மட்டுமின்றி அதே அரசியல் சட்டம் மூன்ருவது தபசில் ஐந்தாவது பிரிவுப்படி அண்ணுத்துரையாகிய நான் சட்டத்தினல் ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசியல்அமைப்பில் உண்மையான நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருப்பேன் என்றும் சென்னை ராஜ்யத்தின் மந்திரியாக என் கடமைகளை நேர்மையுடனும் மனசாட்சியின் படியும் நிறைவேற்றுவேன் என்றும், இந்திய அரசியல் அமைப்பிற்கும் சட்டத்திற்கும் இணங்க அச்சமோ, அபிமானமோ, விருப்போ, வெறுப்போ இன்றி நானுவகையினரான மக்களுக்கும் நியாயம் வழங்குவேன் என்றும் கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன். (அதாவது அவரது ஒரே தேவன் பெயரால் என்றும் சத்தியம் செய்து கொடுத்து விட்டு அந்தப் பதவியில் உட்கார்ந்து, பிறகுசத்தியத்தையும் மனசாட்சியையும் நம்பிக்கையையும் துறந்து ஈனத்தனமான வேலையில் ஈடுபடக்கூடிய அளவுக்கு கீழ்மகன் என்று அவரை இந்த நாட்டில் உள்ள எந்த சாதாரண மனிதனுவது மனந்துணிந்து எண்ணுவானு? [புரிகிறது அல்லவா?] அப்படியே தீர்மானங்கொண்டு வருவதாக வைத்துக் கொள்வோம். தீர்மானத்தின் நகல் — வாசகம் எப்படி இருக்கும்; இருக்க முடியும்? சென்னை ராஜ்யம் என்று வழங்கப்படுகிற இந்தப்பகுதி இந்திய யூனியனிலிருந்து விடுபடவேண்டும்'' என்றுதானே இருக்கும்?

— அந்த இன்றைய சென்னை ராஜ்யத்தில் அண்ணுத்துரையும் அவரது தம்பித்துரைகளும் ஓலமிடுகின்ற கேரளமோ — கர்நாடகமோ ஆந்திரமோ இருக்கின்றனவா? — அவைகளும் டில்லித் தொடர்பிலிருந்து விடுபட வேண்டாமா? அப்போதுதானே துளிகள்கோரும் திராவிடம் கிடைக்கும்? அப்படிவிடுபட வேண்டுமானல் அந்தந்த ராஜ்யத்தின் சட்டமன்றங்களிலும் இத்தகைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டாமா? வேண்டுமாயின் அவைகளைச் செய்வதுயார்? அந்தத்துறையில் கண்ணீர்த் துளிகளார்கள் இதுகாறும் செய்து வருவது என்ன?

— ஒருக்கால் ஆந்திரமும் கேரளமும் கர்நாடகமும் பிரிவினைக்கு எதிர்ப்பாக இருந்து — சென்னை மட்டும் பிரியும் தீர்மானத்தை டேல்லி ஏற்றுக் கொண்டு விடுவதாக வைத்துக்கொள்வோம்! [ஒரு நாளும் நடக்காது வாதத்துக்கு வைத்துக் கொள்வோம்] அண்ணுத்துரை என்ன சொல்வார்?

— இது பெரியாரும், ஆதித்தனும் கோருகின்ற தனித்தமிழ் நாடு ஆச்சே. ஆகவே வேண்டாம் என்று வீதியிலே போட்டுவிடுவாரா?

இல்லை ஏற்றுக் கொள்வார் என்ருல்! மனசாட்சியையும் நேர்மையையும் 150 ரூபாய்க்கோ அல்லது 1500 ரூபாய்க்கோ விலை பேசாது, அல்ஜீரியர்களைப் போல — நாசர்களைப்போல — கென்யர்களைப்போல ஆனல் அன்பு முறையிலே படீரிப்புப் போர் நடத்தி டெல்லியின் எருமைத் தூக்கத்தைக் கலைக்க வேண்டும் என்ற பெரியாரின் கொள்கையை ஏற்காது இருப்பது ஏன்?

(எங்கள் பழக்கம் மனசாட்சியை விற்றுவிட்டு சட்டசபையில் பொறுக்குவதுதான் என்ருல் நான் பேசவில்லை) இத்தியாதி கேள்விகளை எழுப்பினல் அண்ணுத்துரை சுருக்கமாகச் சொல்லிவிடுவார் போடா போடா நாங்கள் ஏனடா இவைகளைப்பற்றியெல்லாம் சிந்திக்கின்ரேம் என்று.

சட்டிச்சாமியார்களும் சாலையோரத்துப் பரதேசிகளும் எதைப்பேசினுலும் இறுதியில் ''சம்போ சங்கரா'' என்பதைப்போல 'கோவிந்தா' கோவிந்தா' என்றுகூறி முடிப்பதைப்போல நானும் எனது சீட கோடிகளும் எதைப்பேசினுலும் எங்கு பேசினுலும்இறுதியில் ''திராவிடநாடுதிராவிடர்க்கே என்று முடிக்கிரேம்'' என்கிருர். பார்த்தீர்களா!

இவ்வளவு பெரிய மேதையிடம் நம் போன்ற சாமான்யர்கள் என்ன பேசமுடியும்! சொல்லமுடியும்? எனவே கப்சிப்!

துளிகளின் ஓலம் தொடர்ந்து ஒலிக்கட்டும்! ★

பொங்கல் விடுமுறையை முன்னிட்டு அடுத்த இதழ் வெளிவராது. மற்றது வழக்கம்போல். — அமைச்சர்.

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: **பாரதிதாசன், புதுச்சேரி.**

அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.

விலை 50 காசு

Telegrams : "VINBROS"

VINBROS & Co.

Telephone : 230.

The Renowned House for :

QUALITY WINES, SPIRITS, BEER AND LIQUEURS

23, Capucins Street, PONDICHERRY.

Manufacturers of : Reputed Pondicherry made Liquors

"HOUSE OF LORDS WHISKY" "LA SOVEREIGN BRANDY"

"BLACK LABEL XXX RUM" "LONDON BRIDGE DRY GIN"

Tel: ENTERPRISE Phone: 111

RAJAH ENGINEERING ENTERPRISES

PONDICHERRY.

We undertake Manufacture of:

Oil Engine Repairs-Fabrication of ornamental Doors and windows - Casting of Spares - Electric Welding-Govt contractors - Transport also Undertaken.

Consult Us For all Your Engineering Needs

N. RANGARAJAH

Proprietor.

REGD No: 505.

PURE COFFEE 100 %

ஸ்ரீ லக்ஷ்மி காபி ஒர்க்ஸ்

புதுச்சேரி

வறுப்பதும் அறைப்பதும்

எலேக்ட்ரிக் மஷினில்.

SREE LAKSHMI COFFEE WORKS

BIG MARCKET, PONDICHERRY.

போன் எண் : 246.

T. S. N. சுந்தரராஜ பாகவதர் & சன்ஸ்

154, பாரதி வீதி, புதுச்சேரி.

எங்களிடம் பி. எஸ். ஜி. கிர்லோஸ்கர் பம்புசெட்டுகளும், பெட்டர் டீசல் இன்ஜின்களும், ராயல்என்பீல்டு மோட்டார்சைக்கிள், மின்சார விசிறிகள் மற்றும் எல்லா வகையான எலக்ட்ரிக் சாமான்களும் கிடைக்கும்.

விரைவில் வருகிறது!

வள்ளுவர்பிலிம்ஸ் & சியாமளா ஸ்டுடியோஸ்

அளிக்கும்

நடிகவேள் M.R. இராதா

இரட்டை வேடங்களில் நடிக்கும்

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

கதை, வசனம்
திருவாரூர். கே. தங்கராசு

காமிரா & டைரக்‌ஷன்
மஸ்தான்

ஸ்டுடியோ: சியாமளா

A.M. JAYAM

தயாராகிறது !

ரேவதிஸ்டுடியோ & எம். ஆர். ஆர். புரொடக்ஷன்ஸ்

அளிக்கும்

நடிக வேள் M.R. இராதா நடிக்கும்

ஆளப் பிறந்தவன்

கதை, வசனம்
A.P. நாகராசன்

டைரக்ஷன்
கே. சோமு

A.M. JAYAM